Registered as a Newspaper in Sri Lanka

பக்கங்கள்: ஆறு

விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

## THE EELANAATHAM

நாதம் 01 | பிரமோதூத ஞு சித்திரை மீ 13ஆம் உ | வியாழக்கிழமை | (26 - 04 - 1990) | ஹிஜ்ரி 1410 | றம்ழான் 29 | ஓசை 67

## கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் மட்டு. இளைஞர் மீது சூடு.

(கொழும்பு)

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் நேற்று முன்தினம் பத்மநாதன் என்பவர் இனந்தெரியாதவர்களால் சுடப்பட்டார்.

மட்டக்களப்பு செங்கலடிக் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் பத்மநாதன், மட்டக்களப்புக்குச் செல்லும் நோக்கத்துடன் இரவு மட்டக்களப்பு மெயில் புகையிரத வண்டியைப் பிடிப்பதாக கோட்டை புகையிரத நிலைய மேடையில் நின்றிருந்த சமயம், மாலை சுமார் 7.50 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் இவரை நோக்கிக் கைத்துப்பாக்கியால் சுட்டுள்ளார்கள். தலையிலும், கால்களிலும் சூடுபட்ட நிலையில் பத்மநாதன் மேடையில் சாய்ந்தார்

துப்பாக்கி வேட்டுச் சத்தத்தைக் கேட்டதுதான் தாமதம் புகையிரதத்துக்காகக் காத்திருந்த பிரயாணிகள் பயத்தினால் நாலாபக்கமும் சிதறி ஓடியுள்ளனர். துப்பாக்கி நபர்களும் கூட்டத்தோடு கூட்டமாகத் தப்பி (6ம் பக்கம் பார்க்க)

### சைக்கிள் உங்களுடையதா?

கடந்த திங்கட்கிழமை அன்று நடைபெற்ற தேனிசை செல்லப்பாவின் இசை நிகழ்ச்சியின்போது விடுதலைப் புலிகளின் மாணவர் இயக்கத்தினால் நடாத்தப்பட்ட துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பில் வைக்கப்பட்ட இரண்டு (02) துவிச்சக்கரவண்டிகள் இன்று வரை உரிமை கோரப்படாத நிலையிலுள்ளன. உரியவர்கள் தகுந்த அத்தாட்சிகளைக் காட்டி, பரமேஸ்வராச் சந்தியிலுள்ள விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க தலைமைச் செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

# தமிழக மீனவர்களின் அத்துமீறல்; கருணாநிதிக்கு பிரபாகரன் புகார்!



(யாழ்ப்பாணம்)

தமிழக மீனவர்கள் தொடர்ந்தும் தமிழீழ கரையோர பிரதேசங்களில் ஊடுருவல் செய்து அடாவடித்தனங்களில் ஈடுபடுவதாகவும், இந்த அத்துமீறல் செயல்களை நிறுத்துவதற்கு தமிழக அரசு உடன் நடவடிக்கை எடுத்து வரவேண்டுமென்றும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சமீபகாலமாக தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் பருத்தித்துறை, மன்னார், கடற்பிரதேசத்தில் கரையோரம்வரை ஊடுருவி எமது மீனவர்களைத் தாக்கியும், வலைகளை அறுத்தும் வன்முறைச் செயல்களில் ஈடுபட்டு வந்ததும் இதற்கு ஒழுங்கு நடவடிக்கையாக விடுதலைப்புலி வீரர்கள் தமிழக மீனவர்களை கைது செய்து, எச்சரித்து விடுதலை செய்து வந்ததும் தெரிந்ததே, எனினும் தமிழக மீனவர்களின் அத்துமீறல் செயல்கள் தொடர்ந்து நடைபெறுவதாக விடுதலைப் புலிகளுக்கு புகார் செய்யப்பட்டதால் தலைவர் பிரபாகரன் இப்பிரச்சினை குறித்து தமிழக முதல்வரிடம் முறையிட்டுள்ளார்.

பிரபாகனின் வேண்டுகோளை அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கலைஞர் கருணாநிதிக்கு தொலைபேசி மூலம் தெரிவித்தார். இப்பிரச்சினை குறித்து உடன் நடவடிக்கை எடுப்பதாக கலைஞர் உறுதியளித்தார்.



## பிரஜை தொண்டர் படையை கலைக்க அமைச்சு முடிவு

(மட்டக்களப்பு)

வடகிழக்கு மாகாணங்களிலுள்ள பிரஜைகள் தொண்டர்படை விரைவில் கலைக்கப்படவுள்ளது. இதற்கான தீர்மானம் பாதுகாப்பு அமைச்சினால் எடுக்கப்பட்டுள்ளதாக விடையமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியப்படையினால் உருவாக்கப்பட்டு பயிற்சியளிக்கப்பட்ட இப்படையிலுள்ளவர்கள் பொலிஸ் சேவைக்குத் தகுதியானவர்கள் அண்மையில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் முன்னுரிமை அடிப்படையில் தெரிவாகியுள்ளனர்.

இந்நிலையில் ஏனையோர் தகுதியற்றவர்களாகக் கருதப்பட்டு பிரஜைகள் தொண்டர் படை கலைக்கப்படும் எனத் தெரியவருகிறது. (37)

## நான்கு பிள்ளைகளின் தந்தை தற்கொலை

(யாழ்ப்பாணம்)

புத்தூர் நவக்கிரியைச் சேர்ந்த சுப்பிரமணியம் கருணாநிதி (வயது 34) கடந்த செவ்வாயன்று நஞ்சருந்தி யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு நேற்றுக் காலமானார்.

இவரது மனைவி வெளிநாடொன்றில் தொழில் புரிகின்றாராம். நான்கு பிள்ளைகளுக்குத்தந்தையான கருணாநிதி பிள்ளைகளைத் தனது தாயிடம் ஒப்படைத்து, அவர்களைப் பாதுகாக்குமாறு கூறிவிட்டு நஞ்சருந்தியுள்ளார் (லோ)

## குசலம் விசாரிக்க வந்த இராணுவ அதிகாரிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்துக்கு நேற்று திடீரென இலங்கை இராணுவ உயரதிகாரிகள் சிலரும் ஒரு பெண்ணும் விஜயம் செய்தனர் இவர்கள் கைகளில் ஏராளமான 'பைல்'களும் புத்தகங்களும் வைத்திருந்தனர் என்பது அவதானிக்க கூடியதாக இருந்தது.

அவர்கள் வந்து திரும்பியதும் யாழ். அரசாங்க அதிபரிடம் இதுபற்றி கேட்டபோது இலங்கை இரா

## ஒன்றுபட்ட ஒரே மேதின விழா இம்முறை யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள மேதினக் கொண்டாட்டங்களில் விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியுடன் இணைந்து சகல தொழிற்சங்கங்களும்,

மாவட்ட அரசியற் பிரிவுப் பொறுப்பாளர் ஸ்ரான்லி டொமினிக் நேற்று காலை நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

அதேவேளை இதுவரை மேதினக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ள தங்களுடன் தொடர்பு கொள் (6ஆம் பக்கம் பார்க்க)

## மன். தேனிசைச் செல்லப்பாவின்

தீர்மானம் பாதுகாப்பு அமைச்சினால் எடுக்கப்பட்டுள்ளதாக விடையமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியப்படையினால் உருவாக்கப்பட்டு பயிற்சியளிக்கப் அடிப்படையில் தெரிவாகியுள்ளனர்.

இந்நிலையில் ஏனையோர் தகுதியற்றவர்களாகக் கருதப்பட்டு பரஜைகள் தொண்டர் படை கலைக்கப்படும் எனத் தெரியவருகிறது. (37)



ரம்வரை ஊடுருவி எமது மீனவர்களைத் தாக்கியும், வலைகளை அறுத்தும் வன்முறைச் செயல்களில் ஈடுபட்டு வந்ததும் இதற்கு ஒழுங்கு நடவடிக்கையாக விடுதலைப்புலி வீரர்கள் தமிழக மீனவர்களை செயல்கள் தொடர்ந்து நடைபெறுவதாக விடுதலைப் புலிகளுக்கு புகார் செய்யப்பட்டதால் தலைவர் பிரபாகரன் இப்பிரச்சினை குறித்து தமிழக முதல்வரிடம் முறையிட் கலைஞர் கருணாநிதிக்கு தொலைபேசி மூலம் தெரிவித்தார். இப பிரச்சினை குறித்து உடன் நடவடிக்கை எடுப்பதாக கலைஞர் உறுதியளித்தார்.



## நான்கு பிள்ளைகளின் தந்தை தற்கொலை

(யாழ்ப்பாணம்)

புத்தூர் நவக்கிரியைச் சேர்ந்த சுப்பிரமணியம் கருணாநிதி (வயது 34) கடந்த செவ்வாயன்று நஞ்சருந்தி யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு நேற்றுக் காலமானார்.

இவரது மனைவி வெளிநாடொன்றில் தொழில் புரிகின்றாராம். நான்கு பிள்ளைகளுக்குத்தந்தையான கருணாநிதி பிள்ளைகளைத் தனது தாயிடம் ஒப்படைத்து, அவர்களைப் பாதுகாக்குமாறு கூறிவிட்டு நஞ்சருந்தியுள்ளார். (லோ)

## வீட்டுக்கடன் விண்ணப்பப்படிவ விநியோகம் நேற்றுடன் முடிவு

(விசேட நிருபர்)

யாழ் மாநகர சபையில் வைத்து வழங்கப்பட்டு வரும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வீட்டுக்கடன் படிவங்கள் விநியோகம் இன்றுடன் (26-4-90) முடிவடைகிறது.

இதுவரை ஏறத்தாழ ஆறாயிரம் படிவங்கள் விநியோகிக்கப்பட்டிருப்பதாக ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் ''ஈழநாதம்'' விசேட நிருபரிடம் தெரிவித்தார்.

15 லட்சம் வீடுகள் கட்டும் அரசாங்கத்தின் திட்டத்திற்கு அமைய ரூபா 15 ஆயிரமும், அதற்கும் குறைந்த தொகையையும் பெறுவதற்காக

(6ஆம் பக்கம் பார்க்க)

## குசலம் விசாரிக்க வந்த இராணுவ அதிகாரிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்துக்கு நேற்று திடீரென இலங்கை இராணுவ உயரதிகாரிகள் சிலரும் ஒரு பெண்ணும் விஜயம் செய்தனர் இவர்கள் கைகளில் ஏராளமான 'பைல்'களும் புத்தகங்களும் வைத்திருந்தனர் என்பது அவதானிக்க கூடியதாக இருந்தது.

அவர்கள் வந்து திரும்பியதும் யாழ். அரசாங்க அதிபரிடம் இதுபற்றி கேட்டபோது இலங்கை இராணுவ அதிகாரிகள் தம்மை குசலம் விசாரிக்க வந்ததாக அவர் தெரிவித்தார். (லோ)

## ஒன்றுபட்ட ஒரே மேதின விழா இம்முறை யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள மே தினக் கொண்டாட்டங்களில் விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியுடன் இணைந்து சகல தொழிற்சங்கங்களும், கட்சிகளும் மே தினக் கொண்டாட்டங்களை நடத்த விருப்பம் தெரிவித்துள்ளதாக விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியற் பிரிவுப் பொறுப்பாளர் ஸ்ரான்லி டொமினிக் நேற்று காலை நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

அதேவேளை இதுவரை மே தினக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ள தங்களுடன் தொடர்பு கொள்

(6ஆம் பக்கம் பார்க்க)

## மன். தேனிசைச் செல்லப்பாவின் இசை நிகழ்ச்சி

(மன்னார்)

தமிழக எழுச்சிப் பாடகர் தேனிசைச் செல்லப்பாவின் இசை நிகழ்ச்சிகள் இன்றும் நாளையும் மன்னார், விடத்தல் தீவு ஆகிய இடங்களில் நடைபெறும்.

இந் நிகழ்ச்சி மன்னார் திறந்த வெளியரங்கில் விசேடமாக அமைக்கப்பெற்ற மேடையில் நடைபெறும் இவ் விழாவுக்கு மன்னார்மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு சுரேஸ் தலைமைதாங்குகின்றார். இவ் விழாவினை மன்னார் மாவட்ட இராணுவத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அளவைகள் மீது இன்று முத்திரையிடல்

(கொழும்புத்துறை)

யாழ் செயலகத்தில் இன்று வியாழக்கிழமை நிறுவைகள் அளவைகள் கருவிகளுக்கு முத்திரையிடும் வேலைகள் நடைபெறவுள்ளன.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நகைக் கடை உரிமையாளர் கூட்டத்திற்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

நாளை வெள்ளிக்கிழமை நகைக் கடை உரிமையாளருக்கான கூட்டம் வின்சர் திரையரங்கில் நடைபெறவுள்ளது. காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் இக் கூட்டத்திற்கு சகல கடை உரிமையாளர்களுக்கும் விடுதலைப் புலிகள் அழைப்பு விடுத்துள்ளனர்,

## 2100 புதிய தனியார் பஸ்கள் ஜூலை சேவையில் ஈடுபடும்

(கொழும்பு)

தனியார் பஸ் போக்குவரத்துச் சபை இவ்விருடம் ஜூலை மாதமளவில் 2,100 புதிய பஸ்களை வீதிகளில் ஓடவிடவிருக்கிறது.

கொழும்பிலுள்ள வர்த்தக வங்கிகள் வழங்கிய கடனுதவியைக் கொண்டு தனியார் போக்குவரத்துத் துறையினர் பஸ்களை இறக்குமதி செய்யவுள்ளனர், வாகனத்தின் மொத்தப் பெறுமதியில் 75.%

(6ஆம் பக்கம் பார்க்க)

### யாழ், மாவட்டம்

## மே மாத ஆரம்பத்தில் இருந்து இரு நேரப் பாடசாலைகள்

(யாழ்ப்பாணம்)

மேமாதம் முதலாந் திகதி தொடக்கம் யாழ். மாவட்ட பாடசாலைகள் அனைத்தும் இரு நேரங்களாக இயங்க வேண்டும் என கல்விப்பணிப்பாளர் சுற்றறிக்கை மூலம் யாழ்மாவட்ட பாடசாலைகளுக்கு உத்தரவிட்டுள்ளார். அவர் தமது சுற்றறிக்கையில் மேலும் சில விடயங்களை முன் வைத்துள்ளார்.

பாடசாலைகளுக்கு இடையிலான, கல்விப்பகுதிகளுக்கிடையிலான சகல கடிதத்தொடர்புகளும் கோவைக் குறிப்புகளும் விதப்புரைகளும் காசோலைகளும் தமிழில் எழுதப்பட வேண்டும்.

மதியபோசனம் தயாரிப்பதையும் மதிய போசன விநி

(6ஆம் பக்கம் பார்க்க)

## தாமதமாக வரும் வர்த்தமானிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண தபாலகத்திற்கான வர்த்தமானிகள் தாமதமாகவே கிடைக்கின்றன.

இது வரை ஏப்ரல் 4ஆம் திகதி வரையிலான வர்த்தமானிகளே யாழ்ப்பா தபாலகத்திற்கு வந்திருக்கின்றன. இதனால் மக்கள் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகின்றனர்.

## துறைசார்ந்த ஆலோசனையை ஆய்வு நிறுவனம் கோருகிறது

(யாழ்ப்பாணம்)

தமிழீழ ஆய்வு நிறுவனம் (ரூட்) வடக்கு-கிழக்கு அபிவிருத்தி வேலைகளில் முனைப்பாக ஈடுபட்டுள்ளது. அதன் குறித்த இலக்கினை அடைவதற்காக விவசாயத்துறை, மீன்பிடித்துறை, மின்சாரத்துறை, திட்ட அமுலாக்கத்துறை கைத்தொழிற்துறை, வங்கித்துறை, நீர்ப்பாசனத்துறை போன்ற வற்றிக்கான திட்டங்களைச் செயற்படுத்த இருக்கின்றது. இவ்விடயத்தில் துறைசார்ந்த நிபுணர்களின் ஆலோசனை எதிர்பார்க்கின்றது.

### அகில இலங்கை

## இஸ்லாமிய மெய்ஞான பேரவை தலைவர் ரம்ழான் செய்தி

இஸ்லாம் பொறுமையின் அடிப்படையிலும், நம்பிக்கையின ஊற்றிலும், சகோதரத்துவத்தின் பிணைப்பிலும் வளர்ந்த ஒரு நல் மார்க்கம். இந்த மார்க்கத்தை வழி கொண்டு முஸ்லிம் மக்கள் இந்த அடிப்படைகளை அடியொற்றியவர்களாக வாழ்வது அவசியம். இவ்வாறு மௌலவி அல்ஹாஜ் ஏ அப்துல் ரகு(பித்

(6ம பக்கம் பார்க்க)

## யாழ். நகர குடிநீர் பிரச்சனை தீர்க்க மாநகர சபை முயற்சி

(விசேட நிருபர்)

யாழ். நகரப் பிரதேசத்தில் குடிநீர்ப் பற்றாக் குறையான பகுதிகளுக்கு குடிநீர்வழங்குவற்கு யாழ்-மாநகரசபை பொதுமக்களுடன் இணைந்து சிரமதான அடிப்படையில் நிறைவேற்றும் புதிய திட்டமொன்றை வகுத்துள்ளது.

இதற்கமைய யாழ். மாநகர சபை வழங்கும் சீமெந்து, கம்பி, மணல், கற்களைக் கொண்டு அப்பகுதி பொது சேவை மன்ற அங்கத்தினர்கள் தண்ணீர் தாங்கிகளை அமைத்துக்கொள்ள வேண்டும்.

அவ்வாறு அமைக்கப்படும் தாங்கிகளில் பவுஸரால் தண்ணீர் நிரப்பப்படுவதன் மூலம் குடிநீர் பற்றாக்குறையை தற்காலிகமாக நிறுத்து

(6ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு அகதிகளை குடியமர்த்த ஐக்கிய நாடுகள் உதவி

(கொழும்பு)

இனக்கலவரங்களை அடுத்து அகதிகளாக இந்தியாவுக்குச் சென்ற, வடக்குக் கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த மக்களை மீண்டும் அவர்களைச் சொந்த இடங்களில் குடியமர்த்தும் இலங்கை அரசின் திட்டத்திற்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் உதவிகளை வழங்க இருக்கின்றது.

இந்தத் திட்டத்தின் படி இந்திய சென்றுள்ளவர்களும் நாட்டின் ஏனைய பகுதிகளில் அகதிகளாகச் சென்றவர்களும், சொந்த இடங்களில் குடியமர்த்தப்படுவதோடு சேதமடைந்த வீடுகளை புனரமைப்பதற்கும் உதவி வழங்கப்படும்.

சேதமடைந்த ஏனைய அரசாங்கக் கட்டிடங்களும் புனரமைக்கப்படும். இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளிலுள்ள பொதுநல ஸ்தாபனங்களும், அரசாங்கத்தின் மீள் குடியமர்த்தல் திட்டத்திற்கு உதவி வழங்கும்.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தின் இலங்கைப் பிரதிநிதி டபிள்யூ-டி. ஹிலறர் புனர் வாழ்வு சமூக நல அபிவிருத்தி அமைச்சர் ஏ. எம். அதிகாரி ஆகியோர்களுக்கிடையில் நேற்று முன் தினம் பாராளுமன்றக் கட்டிடத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போதே இவ்வாறு அறிவிக்கப்பட்டது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நிதி ஒதுக்கீடு இருந்தும் நிர்மாணங்கள் இல்லை

(கொழும்பு)

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு அதிகார பரவலாக்கலின் கீழ் மாகாண சபைகளுக்கு 8 கோடியே 50 லட்சம் ஒதுக்கியுள்ள போதும் சில மாகாணசபைகள் தமது பகுதிகளில் புனர்நிர்மாண திட்டங்களை ஆரம்பிக்க

(6ஆம் பக்கம் பார்க்க)

## வாகனங்களுக்கு புலிகளின் அனுமதிப்பத்திரம்

(யாழ்ப்பாணம்)

நாளையில் இருந்து மோட்டார் வகனங்களுக்கான அனுமதிப் பத்திரங்களை விடுதலைப் புலிகள் வழங்கவுள்ளார்கள். யாழ். கச்சேரியில் மோட்டார் வாகன பரிசோதகர்கள் கடமையில் ஈடுபடாமையால் விடுதலைப் புலிகள் இதனை மேற்கொள்ளவுள்ளார்கள் விடுதலைப் புலிகள் வாகனங்களுக்கான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு முன்னர் வாகனங்களின் தரம் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும். வாகனங்கள் நல்ல நிலையில் இல்லாவிடில் அவ்வாகனங்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட மாட்டாது.

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

கோதுமை அரிசி, றவ்வை எங்களிடமும் பிரதான கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். M. G. M. No - 77 K. K. S. Road, JAFFNA. 67-

(நியூவீனஸ்) யாழ். நகரில் சிறந்த வீடியோ, ஓடியோ றெக்கோடிங்கிற்கும், ரி. வி. அன்ரனா இணைப்பிற்கும் மற்றும் சகலவிதமான ரி. வி. டெக், றேடியோக்கள், மணிக்கூடுகள், எலக்றோனிக் சாதனங்கள் உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள நாடவேண்டிய இடம்: NEW VENUS No: 60 Stanley Road, Jaffna. B/538

சஞ்சிகை ஓடர்

மீண்டும் ஈழநாதம், மங்கை, அம்புலி மாமா, ஆனந்த விகடன், கல்கண்டு, கோகுலம், இரத்தினமாலா, பாலமித்திரா, சுமங்கலி, யூனியர் விகடன், யூனியர் போஸ்ட், இந்தியாருடே (தமிழ் - ஆங்கிலம்), FRONT LINE, SPORT STAR மற்றும் ஏனைய எல்லா இலங்கை, இந்திய சஞ்சிகைகளும் மீண்டும் பதிவு செய்யப்படுகின்றன V.P.Pயிலும் பெற்றுக் கொள்ளலாம். ஸ்ரீ காந் புத்தகசாலை, இல. 165, மின்சார நிலைய வீதி, (பஸ் நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம். (B.825)

# குளிர்சாதனப்பெட்டி வெடித்ததில் மருந்துப் பொருட்கள்சேதம்

(வவுனியா)

பூவரசன் குளம் வைத்திய சாலையில் உள்ள குளிர்சாதனப் பெட்டி திடீரென வெடித்து எரிந்ததில்அதற்குள்வைக்கப்பட்டிருந்த மருந்துப்பொருட்கள் சேதத்திற் குள்ளாயின.

கடந்த ஞாயிற்றுக் கிழமை (22.04.90)இச்சம்பவம் நிகழ்ந்தது.

மேற்படி குளிர்சாதனைப் பெட்டி வைக்கப்பட்டிருந்த கட்டடம் பலத்த சேதத்திற் குள்ளானது.

சில வருடங்களுக்கு முன்னர் தான் இக் குளிர்சாதனப்பெட்டிவைக்கப் பட்டிருந்த கட்டடம் அமைக்கப்பட்டது என்றும் மின்சாரக் கோளாறு காரணமாகவே குறிப்பிட்ட குளிர் சாதனப் பெட்டி எரிந்துவெடித்ததென்றும் தெரிவிக்கப் பட்டது. (தி)

# மேே 15இல் இலங்கை அரசு ஈ.பி.ஆர்.எல்.எப். பேச்சு

(கொழும்பு)

இலங்கை அரசிற்கும் ஈ.பி. ஆர்.எல்.எப். இயக்கத்தினருக்கும் இடையிலான பேச்சு வார்த்தை மே 15-ஆம் திகதி நடைபெறும் எனத் தெரிய வருகின்றது.

ஈ.பி.ஆர்.எல்.எப்.இயக்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர் பிரேமச் சந்திரனுக்கு தோட்டக்கைத் தொழில் அமைச்சர்ரஞ்சன்விஜரட்ணா இது தொடர்பான கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். இப்பேச்சு வார்த்தையில் இலங்கைஅரசின் சார்பில் ரஞ்சன் விஜேயரத்தினாவும் நீதி அமைச்சர் ஹமீத்தும் கலந்து கொள்கின்றனர்.

# முறைசாராக் கல்விப் பிரிவுக்கு ஐ. நா. அபி. திட்டம் உதவி

ஐ. நா. அபிவிருத்தித் திட்டக் குழு ஒப்புக் கொண்டது.

(யாழ்ப்பாணம்)

முறைசாராக் கல்விப் பிரிவு ஆசிரியர்கள் ஏழாயிரம் பேருக்கு பயிற்சி அளிப்பதற்கு ஐ. நா. அபிவிருத்தித்திட்டம் உதவி வழங்குவதாக உறுதி அளித்துள்ளது.

வடபகுதி வந்த ஐ. நா. அபிவிருத்தித்திட்டக்குழு, வடபிராந்திய கல்விப்பணிப்பாளரிடமும் முறைசாராக் கல்விப் பகுதி அதிகாரியிடமும் உறுதி அளித்தனர்.

பயிற்சிக்கு 45 லட்சம் ரூபா செலவாகும் என குழுவிடம் தெரிவிக்கப்பட்டது.

பயிற்சியளிக்கும் போதனாசிரியர்களின் சம்பளத்தையும், பயிற்சிக்குத் தேவையான உபகரணங்களையும் மறுவாழ்வு அமைச்சு ஊடாக வழங்க

## சிகரட் கடத்தல்

(கொழும்பு)

சிகரட்டுகளை திருட்டுத்தனமாக நாட்டிற்குள்ளே எடுத்துவர முயன்ற கொழும்பு துறைமுக பாதுகாப்பு உத்தியோகஸ்தர் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இப் பாதுகாப்பு உத்தியோகஸ்தர் 15000 ரூபா பெறுமதியான சிகரட்டுகளை மாலை தீவிலிருந்து வந்து இறங்குதுறைக்கப்பால் தரித்து நின்ற கப்பல் ஒன்றிலிருந்து சிறு படகு மூலம் நாட்டிற்குள் எடுத்துவர முற்பட்ட போதே இவர் கைது செய்யப்பட்டார்.

## இறந்தவர்களுக்கும் உணவு முத்திரை

(வந்தாறுமூலை)

ஏறாவூர் பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட கிராமங்களில் தற்போது வழங்கப்பட்டு வரும் புதிய உணவு முத்திரைகளுடன் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு இறந்தவர்களின் உணவு முத்திரைகளும் வருகின்றன.

இவற்றை நிறுத்துவதற்கு உரிய திணைக்களங்கள் இதுவரையும் நடவடிக்கை எடுக்காதது கவலைக்குரியதாக உள்ளது என எமது ஈழநாத நிருபரிடம் மக்கள் தெரிவித்தனர்.

மற்றும் சில கிராமசேவகர்கள் இறந்ததவர்களின் முத்திரைகளை பயன்படுத்தி வருவதாகவும் மக்கள் மேலும் தெரிவித்தனர். (29)

# ஆயுள் காப்புறுதி செய்வோருக்கு 90வீத வரி விலக்கு

(கொழும்பு)

ஆயுள் காப்புறுதி செய்து கொள்வோருக்கு 90 சதவீதமான வரி விலக்கு அளிக்கப் படவுள்ளது என பிரதமர் டீ. பி. விஜயதுங்கா நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கட்டிடங்கள் தொடர்பான சட்டத்திலும் திருத்தம் கொண்டு வரப்பட்டு 5வீதமாக உள்ள தேய்மானக் கழிவு 10 வீதமாக மாற்றப்படும் என தெரிவித்தார். அத்தோடு 25 வருடங்களுக்கு மேலான சொத்துக்களை விற்பதற்கு வரி விலக்கு அளிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

# ஊறணி மக்கள் மீண்டும் வீடுகளுக்குச் செல்கின்றனர்

(பொத்துவில்)

இந்திய இராணுவ வெளியேற்றத்தின் பின் இப்பொழுதுதான் ஊறணி மக்கள் தமது வீடுகளை சென்று பார்க்கின்றனர். கடந்த கால வன்முறை சம்பவங்களால் பல வருட காலமாக ஊறணி கிராம மக்கள் தமது கிராமப் பக்கமே செல்லாத நிலை இருந்தது இலங்கை இந்திய இராணுவங்களின் கெடுபிடிகளால் இவர்கள் பெரும் பாதிப்புக்குட்பட்டிருந்தனர்.

இந்திய இராணுவ வெளியேற்றத்தை தொடர்ந்து ஊறணி கிராமத்தில் அமைதி நிலவுவதால் அங்கு மீண்டும் மக்கள் குடியமர தொடங்கி உள்ளனர்.

# பழைய நிலையில் மீண்டும் நாவற்குழிச்சந்தி

நாவற்குழிச்சந்தி மீண்டும் தற்போது புதிய கோலம் பெறத்தொடங்கி உள்ளது.

1985ஆம் ஆண்டுக்குப் பின் இலங்கை இராணுவம் நாவற்குழியை ஆக்கிரமித்திருந்தது பின் இந்திய இராணுவம் நாவற்குழி புகையிரத நிலையத்தில் முகாமிட்டு இருந்தது. அதே நேரம் துரோக கும்பல்கள் நாவற்குழிச் சந்தி கடைகளை ஆக்கிரமித்து இருந்தன. தற்போது இந்திய இராணுவமும் ஏனைய கும்பல்களும்விரட்டப்பட்டதைத் தொடர்ந்து நாவற்குழியில் புதிய புதிய கடைகளும் வாகனம் திருத்தும் சேவை நிலையங்களும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. (லோ)

## மாகாணத்திலேயே பயிற்சி வேண்டும்

(மட்டக்களப்பு)

வட-கிழக்குமாகாணங்களில் அண்மையில் பொலிஸ்நேர்முக பரீட்சையில் தெரிவு செய்யப் பட்டவர்களுக்கானபயிற்சிஇம் மகாணங்களில்வழங்க வேண்டுமென தெரிவானவர்கள் குரல் எழுப்புகிறார்கள்.

இன்றையசூழ்நிலையில் வட-கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே சென்று பொலிஸ் பயிற்சி பெறுவது தமக்குபாதுகாப்பு அல்லஎன்றநிலைஇவர்களிடம்காணப்படுகிறது. 37

## யாழ்நகரில் இன்றைய சினிமா

வின்ஸர்-யாழ்
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
இது நம்ம ஆளு
(புதிய வெளியீடு)

நியூ சாந்தி (யாழ்)
தினசரி 4.00, 6.45, 9.30
ஜெயசங்கர், முத்துராமன் லட்சுமி, நாகேஸ் நடித்த
கண்ணன் வருவான்
(புதிய பிரதி)

மனோகரா - (யாழ்
தினசரி 4.00, 6.45, 9.45
ஜெய்சங்கர் ராஜஸ்ரீ நிர்மலா நாகேஸ் நடித்த
நீதிதேவன்
புதிய பிரதி

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
105 நாள் வெற்றிநடை போடுகிறது
ராஜாதி ராஜா
(கலர்)

## மீண்டும் அவசரகாலச் சட்டம்

(கொழும்பு)

வழமைபோல் நாட்டில் அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது சம்பந்தமாக தீர்மானத்தை ஜனாதிபதி பிரேமதாச பிரகடனப்படுத்தியுள்ளார்.

இந்நீடிப்பு பற்றிய பிரகடனம் சபாநாயகர் மூலமாகப் பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈதுல் - பிதர்
(றம்ழான் பண்டிகை)
வாழ்த்துக்களைத் தமது எண்ணற்ற
இஸ்லாமிய அபிமானிகளுக்குத்
தெரிவித்துக் கொள்கிறது
மில்க்வைற் சோப்




பின்வரும் பொருட்களான...
கட்டிடப் பொருட்கள்
இரும்புச் சாமான்கள்
மின்சார பாவனைப் பொருட்கள்
SLon - G.I, பைப் வகைகள்
இணைப்புக்கள்
தீந்தை வகைகள்

"ஈத் முபாறக்"
பெருநாள் வாழ்த்துக்களை
தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்
ஏ. கே. முகம்மது அன் கோ
14, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(B/826)

Jazeema Picture Palace
*Dealers in Glass & Picture Merchants*

பல்கள் நாவற்குழிச் சந்தி கடைகளை ஆக்கிரமித்து இருந்தன. தற்போது இந்திய இராணுவமும் ஏனைய கும் பல்களும்விரட்டப்பட்டதைத் தொடர்ந்து நாவற்குழியில் புதிய புதிய கடைகளும் வாகனம் திருத்தும் சேவை நிலையங்களும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. (லோ)

மென தெரிவானவர்கள் குரல் எழுப்புகிறார்கள்.

இன்றையசூழ்நிலையில் வட -கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே சென்று பொலிஸ் பயிற்சி பெறுவது தமக்குபாது காப்பு அல்லஎன்றநிலைஇவர் களிடம்காணப்படுகிறது.37

## மீண்டும் அவசரகாலச் சட்டம்

(கொழும்பு)

வழமைபோல் நாட்டில் அவ சரகாலச் சட்டத்தை நீடிப்பது சம்பந்தமாக தீர்மானத்தை ஜனாதிபதி பிரேமதாச பிர கடனப்படுத்தியுள்ளார்.

இந்நீடிப்பு பற்றிய பிரகட னம் சபாநாயகர் மூல மாகப் பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.


ஈதுல் - பிதர்
(றம்ழான் பண்டிகை)

வாழ்த்துக்களைத் தமது எண்ணற்ற இஸ்லாமிய அபிமானிகளுக்குத் தெரிவித்துக் கொள்கிறது

**மில்க்வைற் சோப் தொழிலகம்**




அன்பளிப்பாக அரிய நூல்
"ஏந்தல் நபியின் ஏவல்கள்"
பெற்றுக்கொள்ள
25 மில்க்வைற் மேலுறைகளை
அனுப்பி வையுங்கள்
மில்க்வைற், யாழ்ப்பாணம்,
(B.833)

பின்வரும் பொருட்களான..

கட்டிடப் பொருட்கள்
இரும்புச் சாமான்கள்
மின்சார பாவனைப் பொருட்கள்
SLon - G.I, பைப் வகைகள்
இணைப்புக்கள்
நிந்தை வகைகள்
விவசாய கிருமிநாசினிகள்
மற்றும்
விவசாய உபகரணங்கள்
விதைகள் உரவகைகள்

ஆகியவை தேவைப்படும்போது நினைவுக்கு வரும் நம்பகமான ஒரே பெயர்

**ஸ்ரீ அபிராமி**

பலாலி வீதி,
திருநெல்வேலிச்சந்தி.
(B/ 829)

"ஈத் முபாறக்"
பெருநாள் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்

**ஏ. கே. முகம்மது அன் கோ**

14, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(B/826)

**Jazeema Picture Palace**

***Dealers in Glass & Picture Merchants***

**ஜெஸீமா பிக்சர் பலெஸ்**

222, கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம்.

ஈதுல் - பிதர்
றம்ழான் வாழ்த்துக்கள்
B/832

அனைவருக்கும் எமது இதயபூர்வமான ஈதுல் - பிதர் றம்ழான் வாழ்த்துக்கள்!

உள்ளூர் தயாரிப்புக்களான
குரக்கன் மா, அரிசி மா, உழுந்து மா, கடலை மா,
ஆட்டா மா, சியாக்காய்ப் பவுடர், கோதுமை அரிசிக் குறுணல்
ஆகியவற்றைப் பாவித்துப் பயனடையுங்கள்!

**எம். ஜீ. எம். ஸ்ரோர்ஸ்**

**M. G. M. STORES**

777, காங்கேசன்துறை வீதி,
சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம்.
(B.831)

# சூடான் புரட்சியில் ஈடுபட்ட 28 இராணுவ அதிகாரிகளுக்கு மரண தண்டனை முடிந்தது!

(காட்டூம்)

சூடானில் ஜெனரல் ஓமார் ஹசன் அல் பசீரின் இராணுவ அரசை கவிழ்ப்பதற்காக கடந்த திங்கட் கிழமை நடந்த திடீர் புரட்சியில் சம்பந்தப்பட்ட 28 இராணுவ அதிகாரிகளுக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

துப்பாக்கி அணியினரால் சுட்டுக் கொல்லப் பட்ட இந்த 28 இராணுவ அதிகாரிகளில் மூன்று பேர் கடற்படை ஜெனரல்கள். ஒருவர் பிரிகேடியர் மற்றும் நான்கு பேர் கேணல்களும் அடங்குவர் என சூடானில் வெளியாகும் செய்தித்தாள்கள் கூறுகின்றன.

இத் திடீர் புரட்சியின் முயற்சியில் சம்பந்தப் பட்டதாய் சந்தேகிக்கப் படும் நபர்களை இராணுவ நீதிமன்றங்கள் தொடர்ந்து விசாரித்து வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

இப் புரட்சி முயற்சியின் உள் நோக்கம் என்ன என்பது இன்னும் தெளிவாக தெரியவில்லை. ஆனாலும் சூடான் ஆயுதப் படைகளின் மூத்த அதிகாரிகளை கட்டாயமாக வேலையில் இருந்து ஓய்வு பெறச் செய்தால் புரட்சி முயற்சி நடை பெற்று இருக்கலாம் எனவும் அதிகாரிகள் கருதுகின்றனர்.

## உலகம் ஏற்றுக் கொண்ட தமிழ் இனத்தின் தலைவன் பிரபா

(மட்டக்களப்பு)

''ஆக்கிரமிப்புக்காரர்களின் சூழ்ச்சியினால் தவறான வழி சென்ற எமது சகோதர போராளிகளுடன் நாம் மோத வேண்டிய துரதிருஷ்டம் ஏற்பட்டது தவிர்க்க முடியாததாகும். தமிழ் இனததிற்கு ஒரு தலைவன் தலைவர் பிரபாகரன்தான் என உலகம் இன்று தீர்மானித்துவிட்டது. அந்த தலைவன் தலைமையில் நாம் அணி திரள்வோமானால் எமது இலட்சியங்களை அடைந்து விடலாம்.

மேற்கண்டவாறு தமிழீழ விடுதலைப்புலிகள் மட்டக்களப்பு அம்பாறை பிராந்திய தளபதி கருணா திகிலிவட்டை—இலுப்படி முன்மாதிரி பொதுமக்கள் ஏற்பாடுசெய்த புத்தாண்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

திகிலிவட்டை அ.த.க.பா அதிபர் எஸ். குழந்தைவேல் இவ்விழாவிற்கு தலைமை வகித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:–

இன்று மக்கள் மத்தியில் மகிழ்ச்சி, கலகலப்பு உருவாகியுள்ளது. இம்மாற்றத்திற்கு காரணம் எமது போராளிகளின் தியாகம் தான். அத்தியாகிகளை நாம மறந்து விடக் கூடாது.

எமது போராட்டம் இது போன்ற கிராமங்களிலிருந்து தான் உருவானது. இக்கிராம மக்கள் எங்களை வளர்த்தவர்கள் எமது அபிவிருத்தி வேலைகளை வளர்த்த கிராமங்களில் தான் ஆரம்பிப்போம்.

கிராம அபிவிருத்திசங்க தலைவர் திரு. எஸ். துரைச்சாமி. சமூகசேவைகள் உதவிப் பணிபபாளர் திரு. இரா. தியாகலிங்கம், விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிமாவட்ட அமைப்பாளர் விசு, கோறளைபற்று அமைப்பாளர் எஸ். பி. ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர் (37)

# சீனாவில் நிலக்கரிச் சுரங்கத்தில் வெடிவிபத்து; 33 பேர் பலி!

(பீக்கிங்)

சீனாவின் நிலக்கரிச் சுரங்கத்தில் இடம்பெற்ற வாயுக் கசிவினால் வெடி விபத்து ஏற்பட்டது. இதில் 33 பேர் வரை இறந்துள்ளனர். 11 பேர் வரை படுகாயமுற்றனர்.

மின்சாரத்தில் ஏற்பட்ட கோளாறினால் இவ் விபத்து ஏற்பட்டதாக கூறப்படுகிறது. மின்சாரம் தடைப்பட காற்றோட்டம் நின்றது. இதனால் வாயு நிறைந்து வெடி விபத்து ஏற்பட்டது.

கடந்த காலங்களிலும் சராசரி ஒவ்வொரு வருடமும் நிலங்கரிச் சுரங்கங்களில் இம் முறையான விபத்துக்கள் இடம் பெறுகின்றன. இது வரை 10,000 பேர் வரை இவ் விபத்துக்களினால் இறந்துள்ளனர்.

## காக்கைதீவு மக்கள் அடிப்படை வசதியின்றி அவதி

(சுதுமலை)

காக்கைதீவு மாதிரி கிராம மக்கள் அடிப்படை வசதிகள் எதுவுமற்ற ஒரு சூழ்நிலையில் இருக்கின்றார்கள். இங்கு மலகூடங்களுக்கென வெட்டப்பட்ட குழிகளில் ஊற்றெடுத்து வரும் உவர்த் தண்ணீரையே தமது சமையல் பாத்திரங்களைக் கழுவுவதற்கும் மற்றும் தேவைகளுக்கும் பாவிக்கின்றார்கள். குடிநீருக்கு மிகவும் தொலைவிலுள்ள மயானத்துக்கென்று கட்டப்பட்ட கிணற்றில் இருந்து தண்ணீர் எடுத்து வருகிறார்கள். பிள்ளைகள் கல்விகற்க எந்த வசதிகளும் இங்கு இன்மையால் அவர்களின் கல்வி பாதிப்படைகிறது. இவர்களுக்குக் கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகள்கூட ஒழுங்கற்றவையாயும் உறுதியற்றனவாகவும் இருக்கின்றன.

இவ்வாறு சூழல், சுற்றுப்புறம், சுகாதாரம், கல்வி போன்ற எந்த அடிப்படை வசதிகளும் அற்று மிகவும் கஷ்டமான சூழலில் வாழ்ந்து வரும் தங்கள் மீது கருணை கொண்டு வேண்டிய நடவடிக்கைகளைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொண்டு மற்றும் கிராம மக்களைப் போல் வாழ வழி சமைப்பார்களா என்று இங்கு வாழும் மக்கள் கேட்கிறார்கள். (19)

# சோவியத் யூனியன் மீது மட்டுப்படுத்தப்பட்ட பொருளாதாரத் தடை

(வாஷிங்டன்)

லித்வேனிய விவகாரம் குறித்து சோவியத் யூனியன் மீது அமெரிக்கா மட்டுப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தடையை விதித்துள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அறிவித்திருக்கிறார்.

கடந்த செவ்வாய்க்கிழமை காங்கிரஸ் சபைத் தலைவர்களுடன் சோவியத் யூனியன் பொருளாதாரத்தடை குறித்து விவாதித்த பின்னரே இந் நடவடிக்கையை தான் எடுத்ததாக அவர் குறிப்பிட்டார்.

இதனால் தொழில்நுட்ப வர்த்தகத்துறை பொறுத்து நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகள் தடைப்படலாம் எனக் கருதப்படுகிறது.

லித்வேனியா மீதான பொருளாதாரத் தடையை நீக்குமாறு சோவியத் யூனியனை அமெரிக்கா பல தடவைகள் கேட்ட போதும் சோவியத் அரசு இதனை நிராகரித்து வந்தது. இதனால் தான் அமெரிக்கா மட்டுப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தடையை மேற்கொள்கிறது என ஜோர்ஜ்புஸ் தெரிவித்தார்.

அமெரிக்காவின் இந் நடவடிக்கை பொறுத்து சோவியத் யூனியன் எதுவித கருத்தும் தெரிவிக்காத போதும், உள்நாட்டு விவகாரங்களில் அமெரிக்கா தலையிடுவதை நிறுத்த வேண்டும் என சோவியத் ஜனாதிபதி கொர்பச்சேவ் கண்டிப்பாகக் கூறியுள்ளார்.

## ஆளுநர் நளின் செனவிரட்னா மட்டக்களப்பு விஜயம்

(மட்டக்களப்பு)

வட-கிழக்கு மாகாண ஆளுநர் லெப். ஜெனரல் நளின் செனவிரட்னா அடுத்தமாதம் நடுப்பகுதியில் மட்டக்களப்புக்கு வருகை தரவிருக்கிறார்.

அமைச்சுக்களின் பதில் செயலாளர்கள் சகிதம் இவர் வருகை தருவார். இம்மாவட்டத்தில் மாகாண சபையினால் மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைகள் குறித்து நேரடியாக ஆராய்வதற்காகவே இவர் இங்கு வருகை தருகிறார். (37)

### கண்ணகை ஆலயத்தில் சிலம்பும் களவு

(பருத்தித்துறை)

மந்திகை கண்ணகை அம்பாள் ஆலயத்தின் கதவு உடைக்கப்பட்டு அம்பாளின் வெள்ளி அங்கி, கால் சிலம்பு, உண்டியல் பணம் என்பன கொள்ளையடிக்கப் பட்டுள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

இரவு நேரத்தில் ஆலய கதவை உடைத்துக் கொண்டு உள்ளே சென்ற கொள்ளையர்களே இக் கொள்ளையை நடாத்தியுள்ளனர். இக்கொள்ளை சம்பந்தமாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (25)

## கலாசாரப் பேரவையின் வருடாந்த பட்டமளிப்பு விழா

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கலாசார பேரவையின் வருடாந்த பரிசளிப்பு, பட்டமளிப்பு விழா எதிர்வரும் 30 ஆம் திகதி நகரமண்டபத்தில் நடைபெறும்.

மேலதிக அரச அதிபர் திரு. ஆர். தியாகலிங்கம் தலைமையிலான இவ்விழாவில் பிரதம அதிதியாக அரச அதிபர் திரு. ஆர். யோகநாதன் கலந்து கொள்கிறார்.

கல்விமான் கணபதிப்பிள்ளை (தத்துவசிரோன்மணி) வித்துவான் பண்டிதர் வீ. சி. கந்தையா (மகாவித்துவான் திருமதி கங்கேஸ்வரி கந்தையா இலக்கியமணி பட்டம் வழங்கி கௌரவிக்கப்படுவார். (37)

## பருத்தித்துறை நகரை புனரமைக்க நடவடிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகர புனர்நிர்மாண நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்கான ஆலோசனைக் கூட்டம் ஒன்று பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தில் நகரசபைச் செயலாளர் திரு. கே. சண்

## நிர்வாக சபை உத்தியோகத்தர் தெரிவு

(ஈச்சமோட்டை)

கடந்த 15 ஆம் திகதி நடந்தேறிய கொழும்புத்துறை மேற்கு வதிரீபீட ஸ்ரீ மன்றுளாடும் பெருமாள் விநாயகர் தேவஸ்தான மகாசபைக் கூட்டத்தில் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு. பொ. சண்முகநாதன், துணைத் தலைவர்

### மின்தடை

## புலிகளுடன் சேர்ந்து செயற்பட முஸ்லிம் அணி உருவாக்கம்

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்படும் நோக்கத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் விரைவில் முஸ்லிம் அமைப்பொன்று உருவாகவிருக்கிறது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தற்போதைய போக்கு குறிதது அதிருப்தியடைந்துள்ளார்கள்.

முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் அரசியல் நடவடிக்கையில் ஸ்தம்பிதநிலை போன்ற காரணங்களினால் மேற்படி கட்சிகளிலுள்ள மாவட்ட பிரமுகர்கள் இணைந்து இவ் அமைப்பை உருவாக்கவிருக்கிறார்கள்.

புதிதாக உருவாகவிருக்கும் அமைப்பில் ஐ. தே. க, ஸ்ரீ ல சு. க ஆகியவற்றில் அங்கம் வகிக்கும் பிரமுகர்களும் சேர விருப்பம் தெரிவித்துள்ளதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக பிரமுகரொருவர் கருத்து தெரிவிக்கையில் மேற்படி அமைப்பு அரசியல் கட்சியாக பதிவு செய்யப்படாது தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணைந்து செயல்படும் அமைப்பு என்றார். (37)

## விளையாட்டுப் போட்டிகள் திறமைகளை வெளிப்படுத்தும்

(வவுனியா)

விளையாட்டுப் போட்டிகளில் இளைஞர், யுவதிகள் கலந்து கொள்வதால், அவர் ... விளையாட்டுப் போட்டி விழாவில் கலந்து கொண்டு பேசும் போது, வவுனியா மாவட்ட விடுதலைப் புலிகளின் மக்கள்

னரே இந் நடவடிக்கையை தான் எடுத்ததாக அவர் குறிப்பிட்டார்.

## கண்ணகை ஆலயத்தில் சிலம்பும் களவு

(பருத்தித்துறை)

மந்திகை கண்ணகை அம்பாள் ஆலயத்தின் கதவு உடைக்கப்பட்டு அம்பாளின் வெள்ளி அங்கி, கால் சிலம்பு, உண்டியல் பணம் என்பன கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

இரவு நேரத்தில் ஆலய கதவை உடைத்துக் கொண்டு உள்ளே சென்ற கொள்ளையர்களே இக் கொள்ளையை நடாத்தியுள்ளனர். இக் கொள்ளை சம்பந்தமாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (25)

## கலாசாரப் பேரவையின் வருடாந்த பட்டமளிப்பு விழா

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கலாசார பேரவையின் வருடாந்த பரிசளிப்பு. பட்டமளிப்பு விழா எதிர்வரும் 30 ஆம் திகதி நகரமண்டபத்தில் நடைபெறும்.

மேலதிக அரச அதிபர் திரு. ஆர். தியாகலிங்கம் தலைமையிலான இவ்விழாவில் பிரதம அதிதியாக அரச அதிபர் திரு. ஆர். யோகநாதன் கலந்து கொள்கிறார்.

கல்விமான் கணபதிப்பிள்ளை (தத்துவசிரோன்மணி) வித்துவான் பண்டிதர் வீ. சி. கந்தையா (மகாவித்துவான் திருமதி கங்கேஸ்வரி கந்தையா இலக்கியமணி பட்டம் வழங்கி கௌரவிக்கப்படுவார். (37)

## பருத்தித்துறை நகரை புனரமைக்க நடவடிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகர புனர்நிர்மாண நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்கான ஆலோசனைக் கூட்டம் ஒன்று பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தில் நகரசபைச் செயலாளர் திரு. கே. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் யாழ் உள்ளூராட்சித் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலாலவுடன் உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரிகளும் சமுகமளித்திருந்தனர்.

பருத்தித்துறை நகர புனர்நிர்மாணக் குழு உறுப்பினர்கள் நகர புனர்நிர்மாண நடவடிக்கைகள் பற்றிய ஆலோசனைகளை உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு வழங்கினர்.

பருத்தித்துறை நகர நிர்மாண நடவடிக்கைகள் 45 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

...வாழ்வு, புனரமைப்பு வேலைகள் குறித்து நேரடியாக ஆராய்வதற்காகவே இவர் இங்கு வருகை தருகிறார். (37)

## நிர்வாக சபை உத்தியோகத்தர் தெரிவு

(ஈச்சமோட்டை)

கடந்த 15 ஆம் திகதி நடந்தேறிய கொழும்புத்துறை மேற்கு வதிரீபீட ஸ்ரீ மன்றுளாடும் பெருமாள் விநாயகர் தேவஸ்தான மகாசபைக் கூட்டத்தில் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு. பொ. சண்முகநாதன், துணைதலைவர்கள்: திரு. மு. கனகசபை திரு. து. து. நாகேஸ்வரன். செயலாளர்: திரு. வி. சரவணமுத்து, துணைச்செயலாளர்: திரு. பொ. சிவப்பிரகாசம் பொருளாளர்: திரு. ச. திருநாவுக்கரசு செயற்குழு உறுப்பினர்களாகத் தெரிவாகினர். (45

...தியாகிகளை நாம மறந்து விடக் கூடாது.

எமது போராட்டம் இது போன்ற கிராமங்களிலிருந்து தான் உருவானது. இக்கிராம மக்கள் எங்களை வளர்த்தவர்கள் எமது அபிவிருத்தி வேலைகளை வளர்த்த கிராமங்களில் தான் ஆரம்பிப்போம்.

கிராம அபிவிருத்திசங்க தலைவர் திரு. எஸ். துரைச்சாமி. சமூகசேவைகள் உதவிப் பணிபபாளர் திரு. இரா. தியாகலிங்சம், விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணிமாவட்ட அமைப்பாளர் விசு, கோறளை பற்று அமைப்பாளர் எஸ். பி. ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர் (37)

## மின்தடை

அவசிய திருத்த வேலைகள் செய்ய இருப்பதால் சுன்னாகம் -யாழ்ப்பாணம் 33KV லைனில் எதிர்வரும் 29-04-90 ஞாயிறு காலை 8மணி தொடக்கம் மாலை 5 மணிவரை மின் தடை ஏற்படும் யாழ்நகரின் அநேக பகுதிகட்கு மின்சாரம் இருக்காது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்படும் நோக்கத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் விரைவில் முஸ்லிம் அமைப்பொன்று உருவாகவிருக்கிறது.

சிறிலங்கா முஸ்லிம் சாங்கிரஸ் கட்சியின் தற்போதைய போக்கு குறிதது அதிருப்தியடைந்துள்ளார்கள்.

முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் அரசியல் நடவடிக்கையில் ஸ்தம்பித நிலை போன்ற காரணங்களினால் மேற்படி கட்சிகளிலுள்ள மாவட்ட பிரமுகர்கள் உருவாக்கவிருக்கிறார்கள்.

புதிதாக உருவாகவிருக்கும் அமைப்பில் ஐ. தே. க, ஸ்ரீ ல சு. க ஆகியவற்றில் அங்கம் வகிக்கும் பிரமுகர்களும் சேர விருப்பம் தெரிவித்துள்ளதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக பிரமுகரொருவர் கருத்து தெரிவிக்கையில் மேற்படி அமைப்பு அரசியல் கட்சியாக பதிவு செய்யப்படாது தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணைந்து செயல்படும் அமைப்பு என்றார். (37)

## விளையாட்டுப் போட்டிகள் திறமைகளை வெளிப்படுத்தும்

(வவுனியா)

விளையாட்டுப் போட்டிகளில் இளைஞர், யுவதிகள் கலந்து கொள்வதால், அவர்களிடையே மறைந்து கிடக்கும் திறமைகள் வெளிப்படுகின்றன. முழுமையான மனிதர்களாக உருவாக அவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுகிறது.

இவ்வாறு கோவில் புதுக்குளம் கணேச வித்தியாலய மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விளையாட்டுப் போட்டி விழாவில் கலந்து கொண்டு பேசும் போது, வவுனியா மாவட்ட விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் திரு. தினேஷ் குறிப்பிட்டார்.

ரொகட் விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்திருந்த இவ்விழாவில் கலந்து கொண்டு அவர் மேலும் பேசுகையில்,

விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளுபவர்களிடையே இன, வர்க்க பேதங்கள் மறைகின்றன.

இவ்வாறான விளையாட்டு நிகழ்ச்சிகளுக்கு விடுதலைப் புலிகளின் ஆதரவும், ஒத்துழைப்பும் என்றும் உண்டு.

எமது இளைஞர்கள் சோம்பேறிகளோ திறமையற்றவர்களோ அல்லர். இவர்களுக்கு நாடு தழுவிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள வாய்ப்புகள், சந்தர்ப்பங்கள் வழங்கப்படுவதில்லை என்றார்.

வவுனியா அரசாங்க அதிபர் பேசும் போது,

நீண்ட காலத்தின் பின் மக்கள் வாழ்க்கை சுமுகமாக அமைய விடுதலைப் புலிகள் வழி வகுத்துள்ளனர்.

இச் சந்தர்ப்பத்தில், சமூக முன்னேற்றம், பொருளாதார அபிவிருத்தி முயற்சிகளில் அனைவரும் அக்கறைகொள்ள வேண்டும் என்றார். (தி)

## கம்யூனிஸ்ட் கட்சி (இடது) மேதினம்

(யாழ்ப்பாணம்)

இனப் பிரச்சினைக்கு அரசியல தீர்வை வற்புறுத்தி விலைவாசிகள் ஏற்றத்தை கட்டுப்படுத்துமாறு கோரியும், சம்பள உயர்வை வழங்கவும், அடிப்படை ஜனநாயக மனித உரிமைகளை உத்தரவாதப் படுத்தும் கோரிக்கைகளை முன்வைத்து மேதினத்தை நடத்துவதற்கு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) தீர்மானித்துள்ளது.

## கல்வித் திணைக்களத்தில் பணிப்பாளரின் பெயர்

(யாழ்ப்பாணம்)

யாழ் கல்வித் திணைக்களத்தில் பணிப்பாளர் அலுவலகத்தின் முன் உள்ள பெயர்ப்பலகையில் இவ்வலுவலகத்திலிருந்து மாற்றலாகிசென்றுவிட்ட பழைய பிரதி பணிப்பாளரின் பெயரே இன்றும்உள்ளது.

ஆனால் இவர் மாற்றலாகி சென்று இரண்டு மாதங்களாகிவிட்ட நிலையிலும் இப்பலகை அகற்றப்படாததுகுறித்து கல்வித்திணைக்கள அதிகாரிகளே ஆச்சரியப்படுகின்றனர் என்றாலும் எவரும் இன்னும் அதனை அகற்ற முன்வரவில்லை.

## வீதிகள் அபிவிருத்தித் திணைக்கள அலுவலகம் பரு.துறையில் தேவை

(பருத்தித்துறை)

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் பருத்தித்துறை வீதிகள் அபிவிருத்தித் திணைக்கள அலுவலகத்தை உடனடியாக பருத்தித் துறையிலேயே திறநது வைக்குமாறு பருத்தித்துறை பாவனையாளர் சங்கம் வீதிகள் அபிவிருத்தித் திணைக்களத்தைக் கேட்டுள்ளது.

வீதிகள் அபிவிருத்திச் சபை நிர்வாகப் பரவலாக்கல் திட்டத்தின்கீழ் பீ, தர வீதிகளும் சி தர வீதிகளும் பராமரிப்புகள் வீதிகள் அபிவிருத்தித் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், வீதிகள் அபிவிருத்தித் திணைக்கள அலுவலகங்கள் யாழ்ப்பாணத்திலும் பருத்தித் துறையிலும் திறந்துவைக்கப்படுமென வீதிகள் அபிவிருத்தி அதிகார சபை அறிவித்திருந்தது.

யாழ்ப்பாணத்தில் வீதிகள் அபிவிருத்தித் திணைக்களம் திறந்து வைக்கப்பட்டு நான்கு மாதங்களாகின்றன ஆனால் பருத்தித்துறை வீதிகள் அபிவிருந்தித் திணைக்கள அலுவலகம் இதுவரை திறக்கப்படவில்லை. தற்பேது பருத்தித்துறை வீதிகள் அபிவிருத்தி திணைக்கள அலுவலகம் யாழ்ப்பாண வீதிகள் அபிவிருத்தித்திணைக்களத்துடன் இணைந்தே செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதி மக்கள் பலத்த சிரமங்களை அனுபவித்து வருகின்றனர். இப்பகுதிகளில் நீண்டகாலமாகக் கவனிப்பாரற்றுக் குன்றும் குழியுமாகக் காட்சியளிக்கும் வீதிகள் பற்றி வீதிகள் அபிவிருத்தித்திணைக்கள அலுவலக அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ள முடியாமல் அவலப்பட்டு வருகின்றனர். எனவே பருத்தித்துறை வீதிகள் அபிவிருத்தித் திணைக்கள அலுவலசத்தை வெகு விரைவில் பருத்தித்துறையில் திறந்து வைத்து பாதிப்படைந்துள்ள இப்பகுதி மக்களுக்கு விமோசனம் வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (25)

## பாவற்குளத்தில் ஆடுகளவு

(வவுனியா)

கடந்த 9ஆம் திகதி பாவற்குளம் 4ஆம் யூனிற்றில் உள்ள ஒருவருக்குச் சொந்தமான 27 ஆடுகள் களவு போயுள்ளன. இது சம்பந்தமாக விடுதலைப் புலிகளிடம் புகார்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே சமயம் செட்டிகுளம் வைத்திய சாலையில்திருட்டுப் போன தண்ணீர் இறைக்கும் இயந்திரம் காட்டுக்குள் இருந்து மீட்கப்பட்டுள்ளது

மேற்படி வைத்தியசாலை அதிகாரியின் புகாரையடுத்து தேடுதலில் இறங்கிய புலிகள் இக் களவில் ஈடுபட்டவரை கைது செய்துள்ளனர். (தி)

## கரவெட்டி, மருதங்கேணிக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கும மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கும் புதிய கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் இவ்உத்தியோகத்தர்கள் தமது இடமாற்றத்தை ஏற்றுக் கொள்வதற்கு தயங்கி வருகின்றனர். மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு மாற்றப்பட்ட திரு. வை. ராஜேஸ்வரன் என்பவர் யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஒன்பது ஆண்டுகளாகத் தொழில்புரிபவர் ஆவார். அதேபோல தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் எட்டு ஆண்டுகளாகத் தொழில் செய்த திரு. கே. சிறீபதி என்பவருமே இந்த நபர்களாகும்.

தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வேலை செய்பவருக்கு காங்கேசன் துறை சீமெந்துத் தொழிற்சாலைக்கு தொழிலாளர் ஒப்பந்த தரகு கிடைப்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆகவே அவர் இந்தக் கொள்ளைலாபம் அடிக்கும் சுலபமான வேலையைவிட்டு வரவிருப்பமில்லை என்று யாழ். செயலக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (லோ)

## தமிழ் நாட்டில் எட்டு முகப்புக் கப்பல்

(சென்னை)

தமிழ் நாட்டின் வாணகிரி கரைக்கு அப்பால் எட்டு முகப்புடன் கூடிய கப்பல் ஒன்றின் சிதைவுகளை கடல் தொல்பொருள் ஆய்வாளர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

கடல் சண்டைகள் மற்றும் புயல் காற்றினால் திசை தவறி கவிழ்ந்த ஏராளமான பிரித்தானிய, பிரெஞ்சு, போர்த்துக்கேய மற்றும் டச்சுக் கலங்களில் ஒன்றாக இவை இருக்கலாம் என தொல்லியலாளர்கள் கருதுகின்றனர்.

## 15 லட்சம் வீட்டுத்திட்ட கடன் அனுமதிப் பத்திரம்

(யாழ்ப்பாணம்)

பதினைந்து லட்சம் வீட்டுத் திட்டத்தின் கீழ் நகர வீடமைப்புக் கடன்வாங்குவதற்கான அனுமதிப்பத்திரங்கள் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. இன்று இவ்விண்ணப்பப் படிவங்கள் வழங்குவதற்கான இறுதித் தினமாகும்

நேற்றையதினம் பெருவாரியான மக்கள் யாழ் மாநகர சபை அலுவலகத்தின் முன் கூடி நின்றனர். இவர்கள் அதிகாலை மூன்று மணியளவிலேயே மாநகரசபை வாசலில் முதலிடம் பிடிப்பதற்காக சண்டையிட்டதை பார்க்கக்கூடியதாக இருந்தது. (லோ)

## யப்பானியப் பிரதமர் இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

யப்பானியப் பிரதமர் அடுத்த மாதம் மூன்றாம்திகதியளவில் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார்.

இவர் தனது விஜயத்தின் போது இலங்கையின் சுய வேலைவாய்ப்பு திட்டங்களுக்கு ஜப்பானின் உதவியை பெற்றுக்கொள்வது சம்பந்தமாக பேச்சுவார்த்தைகள் நடைபெற உள்ளது.

அத்துடன் இலங்கையில் வறுமை நிலையை ஒழிப்பதற்கு வேண்டிய உதவிகளை யப்பானிடம் இருந்து பெற்றுக்கொள்வது சம்பந்தமாகவும் ஜனாதிபதி பேசுவார் என ஜனாதிபதியின் வெளிவிவகாரங்களில் ஆலோசகராக இருக்கும் திரு. பிரட்மன் வீரக்கோன்கூறியுள்ளார்.

# ஐ.தே.க. மேதினக் கூட்டம் புது மாதிரி இருக்க வேண்டும்

(கொழும்பு)

எதிர்வரும் ஐக்கிய தேசிய கட்சியின் மே தினக் கூட்டம் வழமையை விட ஒரு முன் மாதிரியாக அமைய வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஒரு நபரையோ அல்லது ஒரு கட்சியையோ தாக்குவதற்காக அது பயன்படுத்தப்படக் கூடாது எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அன்றைய தினத்தில் பயனுள்ள திட்டங்களை முன் வைக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

அரச ஊழியர்களின் குறைகளைக் கேட்டறியுமாறு அதிகாரிகளுக்குபணிப்புரை வழங்கியுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மேதினத்தில் தொழிலாளருக்கு நிவாரணம் வழங்கப்படும் ஆலோசனைகள் தெரிவிக்கப்படவுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

# மின் இணைப்பிற்கு ஒரு லட்சம் ஒதுக்கீடு

(வந்தாறுமூலை)

கொம்மாதுறை உமா அரிசி ஆலை வீதிக்கு புதிய மின் இணைப்புக்காக ரூபா ஒரு லட்சம் மட்டக்களப்பு மாவட்ட ஈரோஸ் பாராளுமன்ற உறுப்பினர் பசீர் சேகுதாவுத் அவர்களின் நடப்பு ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியத்திலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளது.

மின் இணைப்பு வேலைகள் மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. (29)

# செஞ். சங்க பிரதிநிதியிடம் நிவாரண விண்ணப்பம் இல்லை

(கரவெட்டி)

கரவெட்டி செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியிடம் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரணம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவம் இல்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இலங்கைப் படைகளின் இராணுவ நடவடிக்கைகளாலும் அதனைத் தொடர்ந்து இந்தியப் படைகளின் இராணுவ நடவடிக்கைகளாலும் வடமராட்சிப் பகுதி மக்கள் வெகுவாகப்பாதிக்கப்பட்டுள்ளது யாவரும் அறிந்ததே.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கூடிய கரிசனை கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் பெற ஆவன செய்ய வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் பலரும் கோருகின்றனர். (18)

# புங்குடுதீவில் கடை உடைத்து நள்ளிரவில் திருட்டு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு ஆலடிப் பகுதியில் உள்ள சில்லறைக் கடையொன்றில் இருந்து கடந்த சனிக்கிழமை நள்ளிரவு ஐயாயிரம் ரூபா பெறுமதியான சீனி, மிளகாய், பால்மா வகைகள் போன்ற உணவுப் பொருட்கள் களவாடப்பட்டன.

மேற்படி கடையின் உரிமையாளரின் மனைவி மக்கள் கடையில் தூங்கிக் கொண்டிருக்கும் போது கடையின் பின் கதவை உடைத்து உள்ளே புகுந்த திருடர்கள் இப் பொருட்களை களவாடியதுடன் வேறும் பல பொருட்களை சேதப்படுத்தி விட்டு சென்றுள்ளனர்.

அதே இரவு இக்கடையின் அயலிலுள்ள விடொன்றிலிருந்துசைக்கிள்ஒன்றும் திருடப்பட்டுள்ளது. இச்செயல்கள்சம்பந்தமாக விடுதலைப் புலிகளிடம் முறையிடப்பட்டுள்ளதாக தெரிகிறது. (22)

## நாடகம்

(விசேட நிருபர்)

யாழ். திருமறைக் கலாமன்றத்கினர் நாளை 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு யாழ். பிரதான வீதி கலாமன்றக் கலை அரங்கில் ''களங்கம்'' என்னும் சமய நாடகமொன்றை இலவசமாக மேடை ஏற்ற உள்ளனர்.

யாழ். நகரின் சகல பகுதி திறமை வாய்ந்த கலைஞர்கள் ''களங்கம்'' நாடகத்தில் பங்கெடுப்பது குறிப்பிடத்தக்கது. (21)

# வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த தனிமனித முயற்சி தேவை

(கொழும்பு)

இலங்கையில் வெளிவருகின்ற சஞ்சிகைகள் பல குறுகிய காலத்திற்கே நிலைத்து நிற்கின்றன. முதலாம் இதழுடன் நிறுத்தப்பட்ட சஞ்சிகைகளும் உள்ளன. இவ்வாறு நிகழ்வதற்கு பல காரணங்களை கூறலாம். நிதிவசதியின்மை, சஞ்சிகைகளுக்கு வேண்டிய ஆக்கம் கிடைக்காமை முக்கிய காரணங்களாக கருதலாம்.

இவ்வாறு கண்டியில் நடைபெற்ற மலையக நூலக அபிவிருத்தி கருத்தரங்கில் யாழ்ப்பாணப்பல்கலைக் கழக உதவி நூலகர் திருமதி விமலாம்பிகை பாலசுந்தரம் குறிப்பிட்டார்.

கண்டி தோட்டப்பிரதேசங்களுக்கான கூட்டுச் செயலகமும் யாழ்ப்பாண அயோத்தி நூலக சேவையும் கண்டி 'சத்தியோதயம்' மண்டபத்தில் ஏப்ரல் முதல் வாரம் மூன்று நாட்கள் நடத்திய கருத்தரங்கை 'நூலகவில்' ஆசிரியர் திரு. என்.செல்வராஜாநெறிப் படுத்தினார்.

மேலும் திருமதி விமலாம்பிகை பேசுகையில் ''பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் வெளியிடப்படும் தமிழ் நூல்கள் சஞ்சிகைகள் ஆகிய வற்றை சந்தைப்படுத்தும் வாய்ப்புகள்பற்றி யோசிக்க வேண்டும். எழுத்தாளர்கள் நூல் விற்பனையாளர்கள் வெளியீட்டாளர்கள் ஆகிய முத்தரப்பினரிடையே ஒரு நெருக்கமான தொடர்பு இருந்தால்தான் வெளியீடுகளை சந்தைப்படுத்த இலகுவாக அமையும்'' என்றார்.

மலையக எழுத்தாளர் சாரல் நாடன் பேசுகையில் 'மலையக சிறார்கள் வாசிப்பது மிகவும் குறைவு. பள்ளிக்கூடங்களுக்கு போவதற்கு முன்பு அவர்கள் புத்தகங்களை பார்க்காதிருப்பது மிகமுக்கியமானதொரு காரணமாகும். தோட்டங்கள் தோறும் நூல் நிலையங்கள் நகரப்பாடசாலைகள்எல்லாப் பகுதிகளிலும் வாசிப்பு வட்டங்கள் என்றநிலை தோற்றுவிக்கப்படும் வரை நமது நிலைமையில் மாற்றமில்லை.

வாசிப்பை பழக்கப்படுத்திக்கொள்ளாத சமூகத்தில் வாசிக்கும்பழ்க்கத்தை வளர்த்தெடுப்பதற்கு தனி மனித முயற்சி தேவைப்படுகிறது.

அறிவைப் பாதுகாப்பதற்கு காட்டிய சிரத்தையில் கால் வாசியேனும் அறிவைப் பரப்புவதற்கு ஆசிரியர்கள் காட்டவில்லை என்பது பலரது கணிப்பாகும்'' என்றார்.

மற்றும் இலங்கை நூலகச் சங்க உதவித் தலைவர் திரு. எஸ். எம். கமால்தீன், யாழ். தொழில் நுட்ப கல்லூரி நூலகர் செல்வி. ஸ்ரீ. பொன்னையாப்பிள்ளை, யாழ்பல்கலைக் கழக உதவி நூலகர் செல்வி அருளானந்தம், அந்தனிஜீவா ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள். கருத்தரங்கில் மலையகத்தை சேர்ந்த முப்பதுபேர் பங்குபற்றினார்கள். (27)

## கும்பாபிஷேகம்

(பருத்தித்துறை)

அல்வாய் சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள நாகதம்பிரான் ஆலய பிரதிட்டாகும்பாபிஷேகம் இம் மாதம் 28 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

பிரம்மஸ்ரீ கைலை வாமதேவக் குருக்கள் கும்பாபிஷேகத்தை நடாத்தி வைப்பார்.

அன்றைய தினம் அல்வாய் மனோகரா மகளிர் அபிவிருத்திச் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள சிவதீட்சை வழங்கும் வைபவமும் ஆலயத்தில் இடம்பெறும். (25)

## வெளியீட்டு விழா

(இணுவில்)

'புயலை எதிர்க்கும் பூக்கள்' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா எதிர் வரும் ஞாயிற்றுக் கிழமை மாலை 3.30 மணியளவில் இணுவில் சைவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

கலாநிதி சபா.ஜெயராசா தலைமை வகிப்பார்.

# எழுத்தாளர் பயிற்சிப் பட்டறை

(விசேட நிருபர்)

''பேனா முனையால் சாதிக்க முடியாததை ஆயுதங்களாலோ, அணுசக்திகளாலோ சாதித்துவிட முடியாது. எழுத்தாளன் மிகுந்த பசியுள்ளவனாக இருக்கிறான். கருத்துப்பசி, மொழி வளப் பசி, எழுத்து நடைப் பசி, கற்பனா சக்திப்பசி இப்படிப் பல பசிகளைக் கொண்டவன்தான் எழுத்தாளன்.''

இளம் எழுத்தாளர்களுக்கான மூன்று நாள் எழுத்தாளர் பயிற்சிப் பட்டறை கடந்த 20ஆம் திகதி கைதடி நவீல்ட் பாடசாலையில் ஆரம்

பிரதம விருந்தினராக நவீல்ட் பாடசாலை அதிபர் திரு. எஸ். கே. டேவிட் கலந்து கொண்டார்.

திரு. எஸ். கே. டேவிட் பேசுகையில் கூறியதாவது, ''பார்ப்பதும், கேட்பதும், மொழிவதும் கற்றறிந்த கலையாகும். ஒரே விஷயத்தைப் பார்க்கின்ற இருவரின் பார்வைகள் ஒன்றாக இருப்பதில்லை. எழுத்தாளர்கள். விமர்சகர்கள், வாசகர்கள் மத்தியிலும் இந்தப் பார்வை வேறுபாடுகள் நிறைய இருப்பதை அவதானித்துள்ளேன்.

# மலையகத்தில் மேதின விழாவிற்கு ஏற்பாடுகள்

(கொழும்பு)

மலைநாட்டில் மே தினத்தை சிறப்பாக கொண்டாட மலையகத்தில் உள்ள தொழிற் சங்கங்கள் ஆர்வம் காட்டி வருகின்றன. அண்மையில் அரசியல் கட்சியாக அங்கீகரிக்கப்பட்ட தொழிலாளர் தேசிய சங்கம் அட்டனில் மே தினத்தை சிறப்பாக கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

இந்த மே தினத்தில் கடந்த இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக தொழிலாளர்களைப்பற்றி கவிதை எழுதிவரும் தொழிலாளர்களில் ஒருவராக வாழ்ந்த கவிஞர் குறிஞ்சி தென்னவனை கௌரவிக்க உள்ளது. அத்துடன் மலையகத்தின் கவிதை துறையின் முன்னோடிகளில் ஒருவரான கவிஞர் சக்தீ பாலையாவை சிறப்பு பேச்சாளராக அழைத்துள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தனது மே தினக் கூட்டத்தை தலவாக் கொல்லை பொது மைதானத்தில் நடத்தும் கிராமியக் கைத்தொழில்துறை மற்றும் உல்லாசப் பயணத்துறை அமைச்சர்திரு. தொண்டமான் தலைமை வகிக்க பாதுகாப்பு இராஜங்க அமைச்சர் திரு.ரஞ்சன் விஜெரத்தினா சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வார்.

செங்கொடி சங்கமும் ஐக்கியத் தோட்டத் தொளிலாளர் சங்கமும் இணைந்து பொகவந்தலாவ நகரில் மே தினக் கூட்டத்தை நடத்தும் கலவானத் தொகுதி முன்னாள் நாடாளுமன்ற பிரதிநிதி திரு. டி யூ குணசேகரா சிறப்பு அழைப்பாளராக கலந்து கொள்வார்.

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின்மே தினக்கூட்டம் நாவலப்பிட்டியில் தலைவர் ஜனாப்.ஏ.அஸிஸ்தலைமையில் நடைபெறும்.இலங்கை பொது சேவையாளர் சங்கம் கண்டி ஜோர்ஜ் டி சில்வா பூங்காவில் தனது மே தினக் கூட்டத்தை நடத்தும்.

மலையகத்தில் நடைபெறும் மே தினக் கூட்டங்களில் மலையகத்தில் முதன் முதல் தொழிற்சங்கம்அமைத்த தேசபக்தன் கோ. நடேசையரை நினைவு கூரும் படி மலையக கலை இலக்கியப் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

மலையக தொழிற்சங்க மே தினக்கூட்ட ஊர்வலங்களில் மலையக பாரம்பரிய கலைகளான கோலாட்டம் ஒயிலாட்டம்,கும்மி, சரகம், காவடி, காமன்கூத்து என்பன இடம் பெறவுள்ளன. (27)

# கரபந்தாட்டப் போட்டியில் தஸ்நேவிஸ் அணி சம்பியன்

(விசேட நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் குருநகர் பகுதியின்வீரமரணமடைந்த போராளிகளின் வெற்றிக் கிண்ணத்திற்காக மின்னொளியில் நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டிகளில் குருநகர் தஸ்நேவிஸ் விளையாட்டுக் கழக பி அணி சம்பியனாகத் தெரிவானது.

போட்டிகள் அன்னை பூபதி தியாக மரணம் எய்திய இரண்டாம் ஆண்டு பூர்த்தி தினமான கடந்த 19 ஆம் திகதி ஆரம்பமாகி தினமும் மின்னொளியில் குருநகர் சன சமூக நிலைய கரபந்தாட்ட மைதானத்தில் இமமாதம் 22 ஆம் திகதிவரை நடைபெற்று வந்தன.

இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் சனசமூக நிலைய ஏ அணியை எதிர்த்து விளையாடிய குருநகர் தஸ் நேவிஸ் விளையாட்டுக் கழக பி அணி இரு ஆட்டங்களில் முறையே 15-14, 14-9 ஆகிய புள்ளிகளைப் பெற்றதனால் வெற்றியை ஈட்டிக் கொண்டது. (21)

# கிராமிய வங்கியில் தொடர் வட்டி

(அட்டாளைச்சேனை நிருபர்)

கிராமிய வங்கியில்ஈடுவைக்கப்பட்ட நகைகளுக்கு பணம் செலுத்தச் சென்றால் தொடர்ச்சியான வட்டியைச் செலுத்தும்படி கிளை முகாமையாளர்கள் கூறுகின்றனர்

இதனால் வாடிக்கையாளர்கள் மிகவும் இன்னலை எதிர் நோக்குகின்றனர்.இது மக்கள் வங்கியின் கிளையாகத்தான் இயங்கும் பொழுது மக்கள் வங்கி நகைகளுக்கு ஒருவருட வட்டியும்,கிராமிய வங்கிநகைகளுக்கு தொடர்வட்டியும் அறவிடுதுவ ஏன் என்ற கேள்வியுடன் வாடிக்கையாளர்கள் இருக்கின்றனர். (46)

# அம்பாறையிலும் ஆசிரியர் ஊக்குவிப்புப் படி இல்லை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்திலுள்ள ஆசிரியர்களுக்கு இது

வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதாக் வாக்குறுதி அளித்துள்ளதாக

# கிளைச்சங்கம் அங்குரார்ப்பணம்

(விசேட நிருபர்)

வடஇலங்கை சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தின் பண்டத்தரிப்பு கிளைச்சங்கம் சமீபத்தில் அங்குரார்ப்பணம்

## நள்ளிரவில் திருட்டு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு ஆலடிப் பகுதியில் உள்ள சில்லறைக் கடையொன்றில் இருந்து கடந்த சனிக்கிழமை நள்ளிரவு ஐயாயிரம் ரூபா பெறுமதியான சீனி, மிளகாய், பால்மா வகைகள் போன்ற உணவுப் பொருட்கள் களவாடப்பட்டன.

மேற்படி கடையின் உரிமையாளரின் மனைவி மக்கள் கடையில் தூங்கிக் கொண்டிருக்கும் போது கடையின் பின் கதவை உடைத்து உள்ளே புகுந்த திருடர்கள் இப்பொருட்களை களவாடியதுடன் வேறும் பல பொருட்களை சேதப்படுத்தி விட்டு சென்றுள்ளனர்.

அதே இரவு இக்கடையின் அயலிலுள்ள விடொன்றிலிருந்துசைக்கிள்ஒன்றும் திருடப்பட்டுள்ளது. இச்செயல்கள்சம்பந்தமாக விடுதலைப் புலிகளிடம் முறையிடப்பட்டுள்ளதாக தெரிகிறது. (22)

## நாடகம்

(விசேட நிருபர்)

யாழ். திருமறைக் கலாமன்றத்தினர் நாளை 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு யாழ். பிரதான வீதி கலாமன்றக் கலை அரங்கில் ''களங்கம்'' என்னும் சமய நாடகமொன்றை இலவசமாக மேடை ஏற்ற உள்ளனர்.

யாழ். நகரின் சகல பகுதி திறமை வாய்ந்த கலைஞர்கள் ''களங்கம்'' நாடகத்தில் பங்கெடுப்பது குறிப்பிடத்தக்கது. (21)

3.30 மணியளவில் இணுவில் சைவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

கலாநிதி சபா.ஜெயராசா தலைமை வகிப்பார்.

மலையக எழுத்தாளர் சாரல் நாடன் பேசுகையில் 'மலையக சிறார்கள் வாசிப்பது மிகவும் குறைவு.

## எழுத்தாளர் பயிற்சிப் பட்டறை

(விசேட நிருபர்)

''பேனா முனையால் சாதிக்க முடியாததை ஆயுதங்களாலோ, அணுசக்திகளாலோ சாதித்துவிட முடியாது. எழுத்தாளன் மிகுந்த பசியுள்ளவனாக இருக்கிறான். கருத்துப்பசி, மொழி வளப் பசி, எழுத்து நடைப் பசி, கற்பனா சக்திப்பசி இப்படிப் பல பசிகளைக் கொண்டவன்தான் எழுத்தாளன்.''

இளம் எழுத்தாளர்களுக்கான மூன்று நாள் எழுத்தாளர் பயிற்சிப் பட்டறை கடந்த 20ஆம் திகதி கைதடி நவீல்ட் பாடசாலையில் ஆரம்பமானபோது தலைமை வகித்துப்பேசிய திரு. க. கோபாலகிருஷ்ணன் மேற்கண்டவாறு கூறினார்.

பிரதம விருந்தினராக நவீல்ட் பாடசாலை அதிபர் திரு. எஸ். கே. டேவிட் கலந்து கொண்டார்.

திரு. எஸ். கே. டேவிட் பேசுகையில் கூறியதாவது. ''பார்ப்பதும், கேட்பதும், மொழிவதும் கற்றறிந்த கலையாகும். ஒரே விஷயத்தைப் பார்க்கின்ற இருவரின் பார்வைகள் ஒன்றாக இருப்பதில்லை. எழுத்தாளர்கள். விமர்சகர்கள், வாசகர்கள் மத்தியிலும் இந்தப் பார்வை வேறுபாடுகள் நிறைய இருப்பதை அவதானித்துள்ளேன், இவ்வாறு அவர் கூறினார்.

செல்வி வி. தர்மினி நன்றியுரை வழங்கினார், (21)

தமிழீழ விடுதலைப் புலிகளின் குருநகர் பகுதியின்வீரமரணமடைந்த போராளிகளின் வெற்றிக் கிண்ணத்திற்காக மின்னொளியில் நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டிகளில் குருநகர் தஸ்நேவிஸ் விளையாட்டுக் கழகபி அணி சம்பியனாகத் தெரிவானது.

போட்டிகள் அன்னை பூபதி தியாக மரணம் எய்திய இரண்டாம் ஆண்டு பூர்த்தி தினமான கடந்த 19 ஆம் திகதி ஆரம்பமாகி தினமும் சமூக நிலைய கரபந்தாட்ட மைதானத்தில் இமமாதம் 22 ஆம் திகதிவரை நடைபெற்று வந்தன.

இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் சனசமூக நிலைய ஏ அணியை எதிர்த்து விளையாடிய குருநகர் தஸ்நேவிஸ் விளையாட்டுக் கழக பி அணி இரு ஆட்டங்களில் முறையே 15–14, 14-9 ஆகிய புள்ளிகளைப் பெற்றதனால் வெற்றியை ஈட்டிக் கொண்டது. (21)

செலுத்தச் சென்றால் தொடர்ச்சியான வட்டியைச் செலுத்தும்படி கிளை முகாமையாளர்கள் கூறுகின்றனர்

இதனால் வாடிக்கையாளர்கள் மிகவும் இன்னலை எதிர் நோக்குகின்றனர். இது மக்கள் வங்கியின் கிளையாகத்தான் இயங்கும் பொழுது மக்கள் வங்கி நகைகளுக்கு ஒருவருட வட்டியும்,கிராமிய வங்கிநகைகளுக்கு தொடர்வட்டியும் அறவிடுதுவ ஏன் என்ற கேள்வியுடன் வாடிக்கையாளர்கள் இருக்கின்றனர். (46)

## அம்பாறையிலும் ஆசிரியர் ஊக்குவிப்புப் படி இல்லை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்திலுள்ள ஆசிரியர்களுக்கு இது வரை ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படவில்லையாம்.

ஜனாதிபதியின் நடமாடும் சேவையின் போது ஆசிரியர் முறையிட்ட சமயம், ஜனாதிபதி ஆர். பிரேமதாச ஊக்குவிப்புப் படியை உடனடியாக வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதாக் வாக்குறுதி அளித்துள்ளதாக ஆசிரியர்கள் தெரிவிக்கிறார்கள்.

மற்ற அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட இப் படி ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில் இழுபறி நிலையில் உள்ளது.

## கிளைச்சங்கம் அங்குரார்ப்பணம்

(விசேடநிருபர்)

வடஇலங்கை சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தின் பண்டத்தரிப்புகிளைச்சங்கம் சமீபத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

தாய்ச்சங்கத்தலைவர் திரு சு.இராஜேந்திரம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

திரு.அ.ஞானப்பிரகாசடாஸ் பேசுகையில் ''வடமாகாணம் முழுவதும் சிகையலங்கரிப்புக்கான கட்டணங்கள் ஒரே நிலையில் வசூலிப்பதும் புதன் கிழமைகள் தோறும் விடுமுறையைஎடுப்பதுமென்ற ஒழுங்கைச் சங்கம் வலுப்படுத்தி வருகிறது'' என்றார்.

கிளைச்சங்க நிர்வாகிகளாகத் தெரிவு செய்'ப்பட்டோர் தலைவர் :திரு,க.கனகரத்தினம், உபதலைவர் திரு. த.இராசரத்தினம், செயலாளர்திரு ச. குணரத்தினம், உபசெயலாளர் திரு மு.திருநாமம்,பொருளாளர் திரு.சி.சுப்பிரமணியம். (21)

முதலாவது

## பிறந்த தின வாழ்த்து



செல்வி

### திவ்வியா திவ்வியானந்தன்

திவ்வியானந்தன் சாருலதா தம்பதிகளின் செல்வப் புதல்வி திவ்வியா தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று 26. 04. 1990 மயிலிட்டியில் உள்ள தனது இல்லத்தில் அப்பா, அம்மா, அப்பப்பா, மாமிமாருடன் குதூகலமாய் கொண்டாடுகின்றார். இவரை அப்பப்பா, கொழும்பில் இருக்கும் பெரிய மாமா, பெரிய மாமி குடும்பத்தினர். லண்டனில் இருக்கும் சின்ன மாமா, சின்ன மாமி குடும்பத்தினர், நெதர்லாண்டில் இருக்கும் சித்தப்பா, சின்னம்மா குடும்பத்தினர், ரமேஷ் சித்தப்பா, ரமணன் சித்தப்பா, ரஞ்சித் சித்தப்பா, ரேணுகா மாமி, ரஜி மாமி மற்றும் அம்மம்மா, சோபிதா சின்னம்மா, நிசா மாமா, சுசா சின்னம்மா, பிரியா, கௌதமி, மிகிரா, டிலக்சினி ஆகியோர் பல் கலையும் கற்று அன்பும், பண்பும் பெருகி பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

லட்சுமி திலகம், மயிலிட்டி.

(R–432)

## பாடசாலைபிள்ளைகள் அனுமதி எம்.பி. தலையிடக் கூடாது

\- ஜனாதிபதி

(கொழும்பு)

பாடசாலைகளில் பிள்ளைகளை அனுமதிப்பது தொடர்பான விடயங்களில் பாராளுமன்ற உறுப்பினர்கள் தலையிடக்கூடாது என ஜனாதிபதி பிரேமதாசா அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்

பாடசாலைப் பிள்ளைகள் அனுமதி குறித்து அமைச்சரவைக் கூட்டத்தில் கல்வி, உயர் கல்வி அமைச்சர் லலித் அத்துலக் முதலி விளக்கமளித்த போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

பிள்ளைகளை அனுமதிப்பதற்கு ஒவ்வொரு பாடசாலைகளிலும் ஒரு ஆலோசனைக் குழு நேர்முகப் பரீட்சைகளை நடாத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதனால் மாணவரின் இருப்பிடங்கள் பற்றிய பொய்யான உறுதிப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் கட்டங்கள் ஏற்படாது.

மே மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் சகல விண்ணப்பங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். சேர்க்கப்பட்டவர்களின் விபரம் ஜுலை மாதம் பகிரங்கப்படுத்தப்படும். இவ்வாறு அவர் கூறினார்.


''ஈத் முபாறக்'' பெருநாள் வாழ்த்துக்களை
அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்களுக்கு
தெரிவிக்கின்றோம்.
—ஹோட்டல் உரிமையாளர், ஊழியர்கள்

வாய்க்கு ருசியான மணம் காரத்துடன்
- கட்லட்
- பெட்டீஸ்
- ரோல்ஸ்
- கேக் வகைகள்
- கோழி ரோஸ்
- கோழி புரியாணி
- கொத்துரொட்டி
- ஆட்டிறைச்சிப் புரியாணி
- மாட்டிறைச்சிப் புரியாணி,
- வட்டலாப்பம்
- முட்டைரொட்டி
- குளிர் பானங்கள்

மேலும் சூடான
மைலோ, விவா, நெஸ்டமோல்ட், நெஸ்கோபி
இனிதுடன் பருகிட என்றென்றும் சுவைத்து
இன்புற வருக வருக என அழைக்கிறது.

ஹோட்டல் ஓரியன்ட்
நாவலர் வீதி, ஐந்து சந்தி,
யாழ்ப்பாணம்
(B-827)



புதிய உயர் கல்லூரி ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

A/L - 91 இந்து சமயம் — அருள்நங்கை

ஆரம்பம்: 28-4-1990 — 12-00 மணி

(B.821)



வீடு கட்டுவோருக்கும்
கட்டிட ஒப்பந்தக்காரருக்கும்
உங்களுக்குத் தேவையான
- கட்டடப் பொருட்கள்
- தீந்தை வகைகள்
- இரும்புச் சாமான்கள்
- சீமெந்து
- பைப் வகைகள் - இணைப்புக்கள்

அனைத்திற்கும் நிதான விலையில்
தரமானதாகப் பெற்றுக்கொள்ள

கீதா ஸ்ரோர்ஸ்
பலாலி வீதி,
திருநெல்வேலி சந்தி.
(B.828)


## வேகத் தடுப்பு தடை நீக்கம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பொலிஸ் நிலையம் முன்பு காணப்பட்ட வாகன வேகத் தடுப்புகள் (பம்பிங்) யாவும் தற்போது அகற்றப்பட்டுள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த கோரிக்கையின பிரகாரம் அகற்றப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலைய சுற்றாடல் வீதிகளில் காணப்பட்ட சென்றிகள், மணல் மூட்டைகள், மண் பரவல்கள் என்பனவும் அகற்றப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, கல்முனை வீதி களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையம், இராணுவ முகாம் முன்பும் காணப்பட்ட வாகன வேக தடுப்புகள் யாவும் நீக்கப்பட்டுள்ளது. (37)


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

### சிந்தனைக்கு

எந்தையுந் தாயும் மகிழ்ந்து குலாவி
யிருந்ததுமிந்நாடே - அதன்
முந்தையராயிர மாண்டுகள் வாழ்ந்து
முடிந்தது மிந்நாடே - அவர்
சிந்தையிலா யிரமெண்ணம் வளர்ந்து
சிறந்ததுமிந்நாடே

- பாரதியார்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 26 - 04 - 90

தொலைபேசி

ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாக பீடம்: 2208

## ஆறாவது திருத்தம்

இலங்கை அரசியல் அமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்க வேண்டும் என்ற கோரிக்கை இன்னமும் பரிசீலனை நிலையில்தானிருந்து வருகிறது.

ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கு ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவுக்கு ஆட்சேபமில்லை.

ஆளும் கட்சிக்குள்ளும் ஆறாவது திருத்தத்தை நீக்குவது பற்றி பலத்த அபிப்பிராய பேதங்களிருப்பதாகத் தெரியவில்லை.

எதிர்க்கட்சிகளைப் பொறுத்தவரையில் அரசியல் அமைப்பிலுள்ள ஆறாவது திருத்தத்தை நீக்கும் யோசனையை ஒரு பிரச்சினையாக்கி அரசுக்கு எதிரான ஒரு கிளர்ச்சிக்கு வழிவகுத்து அரசியல் இலாபம் தேட முடியுமா என்பதில்தான் அக்கறையே தவிர ஆறாவது திருத்தம் பற்றியல்ல என்பது தெளிவு.

ஆறாவது திருத்தம் நாட்டைப் பிரிப்பது பற்றிப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் தடை விதிக்கிறது. இதை மீறுபவர்களுக்குக் கடும் தண்டனைகளும் உண்டு என்று கூறுகிறது.

ஆறாவது திருத்தம் கொண்டுவரப்பட்டதால்தான் பழைய பாராளுமன்றத்திலிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பதவியிழந்தனர்.

கடந்த பொதுத் தேர்தலில் கூட்டணியினர் கூடா நட்புச் சேர்ந்து தந்நாமம் கெட்டு யாருக்கோ கூட்டணியைப் பறிகொடுத்தனர்.

இன்று கூட்டணியின் பெயரைப் பாராளுமன்றத்தினுள் வைத்துக்கொண்டிருப்பவர்களுள் ஒரு பகுதியினரான ஈ.பி.ஆர்.எல்.எவ். என்ற ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர் இன்று ''செத்துக் கொண்டிருக்கும்'' வடக்கு கிழக்கு மாகாணசபையின் ஆட்சிப் பொறுப்பில் இருந்தனர்.

இந்திய இராணுவம் இலங்கையிலிருந்து வெளியேற ஆயத்தமான சமயத்தில் ''ஈழ சோஷலிச குடியரசு'' பிரகடனத்துக்கு ஒரு வருடகால அவகாசம் கொடுத்து ''அந்தக் குடியரசுக்கு'' புதிய அரசியல் அமைப்பைத் தயாரிக்கும் ''அரசியல் நிர்ணய சபை''யாக மாகாண சபையை மாற்றிக் கொண்டனர்.

அதாவது இலங்கை அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்துக்கும் மாறாக ''தனி நாடு பிரகடனம்'' பற்றித் தீர்மானம் நிறைவேற்றியிருந்தனர்.

# புதிய வீதிகளால் வாழ்விடத் தேவைக்கு

# பெரும் நிலப்பரப்பு உட்படும்

பேராசிரியர்

பொ: பாலசுந்தரம்பிள்ளை Ph. D.

**நேற்றைய தொடர்ச்சி**

அல்லைப்பிட்டி, மண்கும்பான், செட்டிபுலம், சரவணை நாரந்தனை, செருக்கன், கரம்பன் ஆகிய இடங்களில் கீழ் மட்ட சேவை நிலையங்கள் விருத்தியாக்கப்பட வேண்டும். மக்களின் அன்றாடத் தேவைகள் பலவற்றைப் பூர்த்தி செய்யும் வர்த்தக சேவை நிறுவனங்கள் இடம்பெற வேண்டும். வேலணைத்தீவில் கிழக்கு அரைப்பகுதியில் புதிய குடியிருப்புக்களை விருத்தியாக்கக்கூடிய வாய்ப்புகளுண்டு. அல்லைப்பிட்டிச் சந்தியைச் சூழவுள்ள பிரதேசத்தில் ஒரு சிறு நகர் வளர வாய்ப்புண்டு அல்லைப்பிட்டி யாழ்ப்பாண நகருக்கு அண்மித்திருப்பதாலும் ஓரளவு வெற்று நிலம் காணப்படுவதாலும் கிட்டிய தூரத்தில் நன்னீர் இருப்பதால் இதனை யாழ்ப்பாண நகரத்தின் ஒரு உப நகரமாக விருத்தி செய்யலாம். இதன் மூலம் யாழ்ப்பாண நகரில் நெருக்கமாக வாழும் தீவுப் பகுதி மக்கள் இந்நகரில் குடியேறி யாழ்ப்பாண நகருக்குச் சென்றுவரக் கூடிய நிலைமை ஏற்படலாம். ஏற்கனவே இச் சந்தியைச் சூழ பல வீடுகள் அமைக்கப்பட்டிருப்பதனைக் காணலாம்.

### அனலைதீவு

அனலைதீவு 4000க்கு மேற்பட்ட மக்களையும் 6.7 சதுர கிலோ மீற்றர் பரப்பையும் கொண்டுள்ளது. இத்தீவில் குறிப்பிடத்தக்க விவசாய நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன. இத்தீவின மத்தியில் காணப்படும் சேவை நிலையத்தைச் சார்ந்து ஆஸ்பத்திரி, உயர்தரப்பாடசாலை, உப தபாற்கந்தோர், கிராமசபைக் காரியாலயம், சங்கக்கடை மற்றும் சில வர்த்தக நிறுவனங்கள் காணப்படுகின்றன. இத்தீவு பரப்பில் சிறியதாக இருப்பினும் மக்கள் அடர்த்தி உயர்வாக இருப்பதாலும் இக்கிராமத்தைச் சேர்ந்தவர்கள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் வாழ்வதால் ஓரளவு உயர்ந்த வாழ்க்கைத்தரத்தை அனுபவிக்கின்றனர். போதிய ஆசிரியர்கள் மற்றும் அரச ஊழியர்கள் பற்றாக் குறைவால் இங்கு கிடைக்கும் சேவைகள் தரம் குறைவாக உள்ளன. இதனால் அனலைதீவு மத்தியில் விருத்தி பெற்றுள்ள சேவை நிலையத்தின் தரம் சேவையாலும், பௌதீக வசதிகளாலும் உயர்த்தப்பட வேண்டும்.

### மண்டைதீவு

மண்டைதீவும் 4000க்கு மேற்பட்ட மக்களையும் 10.1 சதுரகிலோ மீற்றர் பரப்பையும் கொண்டுள்ளது. இத்தீவின் சிறப்பான நிலப்பயன்பாட்டு ஒழுங்கைக் கொண்டுள்ள இத்தீவின் தென்கிழக்கு பகுதி தோட்ட நிலங்களையும், மேற்கு, வடக்குக்கரை யோரப்பகுதி சதுப்பு நிலங்களையும் இதற்கு அடுத்து உட்பகுதி தரவை நிலமாகவும் இதற்கு அடுத்து நெல்வயலாக இருக்கிறது. தீவின் நடுப்பகுதியில் குடியிருப்புக் காணப்படுகின்றது. குடியிருப்புப் பகுதியின் நடுவில் மண்டைதீவின் சேவை நிறுவனங்கள் காணப்படுகின்றன. மகாவித்தியாலயம், உபதபாற்கந்தோர், அபிவிருத்திச்சபைகிளைக்காரியாலயம், கிராமசேவகர் பிரிவுக் காரியாலயம், கூட்டுறவுச்சங்கக்கடைக்கிளைகள், தனியார் சிறு பலசரக்குக் கடைகள் காணப்படுகின்றன. இங்குள்ள அரச நிறுவனங்களால் வழங்கப்படும் சேவைகள் தரக் குறைவாக இருப்பது இத்தீவின் வளர்ச்சிக்குத் தடையாகவிருக்கின்றது. இதனால் இத்தீவின் சேவை நிறையத்தின் தரம் சேவைகளாலும், பௌதிக வசதிகளாலும் உயர்த்தப்பட வேண்டும்.

இவ் உபநகரின் வளர்ச்சிக்கு ஏற்ற வீடமைப்புத் திட்டத்துடன் இந்த நகரும் திறம்பட இயங்குவதற்குத் தேவையான பல நிறுவனங்கள் இடவமைவு பெறவேண்டும். 5000க்கு மேற்பட்ட மக்கள் வாழக் கூடிய நகரமாக விருத்தி செய்யக் கூடிய உள்ளார்ந்த நிலவளத்தைப் பெற்றுள்ளது. மேலும் இப்பிரதேச நிலப்பகுதி உவர் நிலமாக இருப்பதால் விவசாயச் செய்கைக்கு உட்படுத்த முடியாது.

மண்கும்பான் பிள்ளையார் கோவிலடியைச் சூழவுள்ள பிரதேசத்தை விருத்தி செய்வதன்மூலம் ஒரு விவசாய சார்பற்ற கிராமியக் குடியிருப்பை விருத்தி செய்யலாம். இக்கிராமமும் யாழ்ப்பாண நகருடன் நெருங்கிய பொருளாதாரத் தொடர்பு கொண்டதாக அமையும். இக்கிராம மக்கள் நகரப் பொருளாதார நடவடிக்கைகளுடன் இணைந்தவர்களாக இருக்கலாம். பிள்ளையார் கோவிலுக்கு வடக்கிலிருக்கின்ற உயரமான பனைவளவுப் பகுதி மற்றும் கோயிலுக்குத் தெற்கு. கிழக்குப் பகுதிகள் குடியிருப்புக்கு ஏற்ற பகுதியாக இருக்கின்றது. ஏற்கனவே கோயில் பகுதியில் நிரந்தரக்கடைகள் சில காணப்படுகின்றன. மண்கும்பான் பாடசாலை, உபதபாற் கந்தோர் ஆகியனவும் தூரத்தில் இல்லை.

வேலணை கிழக்கில் குறிப்பாக இடிவிழுந்த குண்டுக்கு தெற்காக அமைந்துள்ள மணியங்காட்டுப்பகுதி பெரிய குடியேற்றத் திட்டம் அமைக்கக் கூடிய நிலநீர் வளங்களைக் கொண்டுள்ளது. இப்பகுதி ஊர்காவற்றுறை யாழ்ப்பாண வீதிக்கு அணித்தாக இருப்பதுவும் குடியிருப்புகள் இல்லாத பெரியளவு காணிகள் காணப்படுவது வாழிடக் குடியேற்றத்துக்கு ஏதுவாக இருக்கிறது. இத்திட்டத்தில் வேலணையில் நிலமில்லாத குடும்பங்களுக்கு வீடமைப்புத் திட்டம் உருவாக்கப்பட வேண்டும். இத்திட்டமும் விவசாய சார்பற்ற கிராமியக் குடியிருப்பாகவே அமையும். இடிவிழுந்த குண்டு, வெட்டிக்குளம் வீதி அமைக்கப்பட்டால் இக்குடியேற்றத் திட்டம் வேலணை தென் பகுதிகளுடன் நேரடியாக இயங்க முடியும்.

வங்களாவடி நகரின் பின்னணி நிலங்களில் முக்கியமானது வேலணை மேற்கு. வேலணை - புங்குடுதீவு வீதிக்கும் புளியங்கூடல் சந்தி சுருவில் வீதிக்கும் இடைப்பட்ட வேலணை மேற்கு, வேலணைத் தீவின் வழமையான பயிர்ச் செய்கைப் பகுதியாகும். 1970 – 77க்கு இடைப்பட்ட காலத்தில் இதன் தென்பகுதியில் உள்ள செம்மண்காட்டுப் பிரதேசங்கள் பயிர்ச்செய்கை நிலங்களாக மாற்றப்பட்டன. இப்பகுதி வருடம் முழுக்க நீர் கிடைக்கும் பகுதியாக உள்ளது. செறிவான மிளகாய், புகையிலைச் செய்கை இங்கு இடம் பெறுகின்றது. இன்னும் இந்த வருமானத்தில் இங்குள்ள மக்கள் தங்கியிருந்தாலும் வெளிநாட்டு வேலை வாய்ப்பால் மாற்றம் ஏற்பட்டு வருகின்றது. இப்பகுதியில் மீள்குடிபரம்பலுக்கு ஏற்ற வாய்ப்புக் காணப்படுகிறது. வேலணை சந்திராச் சந்தியில் இருந்து செம்மண்காட்டுப் பகுதியூடாக கைத்தனை வீதியைச் சந்திக்க வீதி அமைப்பதால் மீள் பரம்பலுக்கு வழி ஏற்படுத்தலாம்.

### ஊர்காவற்றுறை நகரம்

ஊர்காவற்றுறை இன்று 3500 மக்களைக் கொண்ட சிறிய நகராக இருக்கிறது. 1960களுக்கு முன்னர் இந்நகர் பல துறைகளில் தீவுப்பகுதியின் முன்னணி நகராக இருந்தது. இதன் துறைமுகச் செயற்பாட்டு வீழ்ச்சியும், பண்ணைப்பாலம் அமைக்கப்பட்டதாலும் இதனது முக்கியத்துவம் குறைவடைந்ததும், யாழ்ப்பாணம் தீவுப்பகுதி மக்களின் பிரதான நகராக மாறியது.

இந்நகரின் எதிர்காலம் இந்நகரில் அமைந்துள்ள துறைமுக விருத்தியிலேயே தங்கியுள்ளது இதனை வட இலங்கையின் முக்கிய மீன்பிடித் துறைமுகங்களுள் ஒன்றாக விருத்தி செய்ய வேண்டும். இங்கு மீன்பிடி தொடர்பான கைத்தொழில்கள் குறிப்பாக ஐஸ் தொழிற்சாலை கப்பல் கட்டல், கப்பல் திருத்தல்போன்ற

## ஊர்சுற்றி

**எழுதுவது**

தந்தை செல்வநாயகம் மரணமான - சிரார்த்த தினம் இன்று ஆகும்.

தந்தை செல்வாவின் இறுதிச் சடங்கு யாழ். முற்றவெளியில் நடந்த போது சாரி சாரியாக மக்கள் சகல வழிகளாலும் முற்றவெளிக்கு வந்து கொண்டிருந்தனர்.

நேற்று முன் தினம் மாலை யாழ். கோட்டை முற்றவெளி மைதானத்தில் நடந்த தேனிசைச் செல்லப்பாவின் இசைநிகழ்ச்சிக்கு வெள்ளம் போல் தமிழர் கூட்டம் திரண்டு வந்தபோது தந்தை செல்வாவின் இறுதிச் சடங்கு நிகழ்ச்சிகளும் நினைவுக்கு வந்தன.

தெல்லிப்பளையில் தந்தை செல்வா பின்புறமாக விழுந்து பிடரி அடிபட்டு அறிவு மயங்கிய நிலையில் யாழ். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பிற்பகலில் இச் செய்தி கிடைத்ததும் (அப்பொழுது நான் 'ஈழநாடு' பத்திரிகையில் பணியாற்றிக் கொண்டிருந்தேன்.) வெளியூர்ப் பதிப்புக்கு அவசர அவசரமாக ஒரு சிறு செய்தியை எழுதிக் கொடுத்து விட்டு மருத்துவமனைக்கு விரைந்தேன். அங்கு எல்லோருக்கும் முதல் வீரகேசரி செல்லத்துரை நின்றார். மற்றும் பத்திரிகை நிருபர்களும் நின்றனர். தமிழரசுக் கட்சிப் பிரமுகர்களும் நின்றனர்.

அன்றிரவு டாக்டர் கப்ரால் என்ற வைத்திய நிபுணர் விசேஷ விமானத்தில் கொழும்பிலிருந்து வந்து தந்தை செல்வாவைப் பரிசோதித்து சத்திர சிகிச்சையும் செய்தார்.

நள்ளிரவாகி விட்டது. நாங்கள் எல்லோரும் மருத்துவ மனையில் தான்.

சத்திரசிகிச்சை வெற்றிகரமாக நடந்து விட்டது. (ஒப்பரேஷன் சக்ஸஸ்) காலையில் பெரியவர் கண் விழித்து விடுவார் என்று டாக்டர் எங்களிடம் கூறினார்.

ஆறாவது திருத்தம் கொண்டுவரப்பட்டதால்தான் பழைய பாராளுமன்றத்திலிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பதவியிழந்தனர்.

கடந்த பொதுத் தேர்தலில் கூட்டணியினர் கூடா நட்புச் சேர்ந்து தந்நாமம் கெட்டு யாருக்கோ கூட்டணியைப் பறிகொடுத்தனர்.

இன்று கூட்டணியின் பெயரைப் பாராளுமன்றத்தினுள் வைத்துக்கொண்டிருப்பவர்களுள் ஒரு பகுதியினரான ஈ.பி.ஆர்.எல்.எவ். என்ற ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர் இன்று ''செத்துக் கொண்டிருக்கும்'' வடக்கு கிழக்கு மாகாணசபையின் ஆட்சிப் பொறுப்பில் இருந்தனர்.

இந்திய இராணுவம் இலங்கையிலிருந்து வெளியேற ஆயத்தமான சமயத்தில் ''ஈழ சோஷலிச குடியரசு'' பிரகடனத்துக்கு ஒரு வருடகால அவகாசம் கொடுத்து ''அந்தக் குடியரசுக்கு'' புதிய அரசியல் அமைப்பைத் தயாரிக்கும் ''அரசியல் நிர்ணய சபை''யாக மாகாண சபையை மாற்றிக் கொண்டனர்.

அதாவது இலங்கை அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்துக்கும் மாறாக ''தனி நாடு பிரகடனம்'' பற்றித் தீர்மானம் நிறைவேற்றியிருந்தனர்.

இவர்கள் மீதும் இவர்களைச் சார்ந்த பாராளுமன்றப் பிரதிநிதிகள் மீதும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மாகாண சபைக்கு அதிகாரங்கள் வழங்கவில்லையானால் ''தனிநாடு பிரகடனம் செய்வோம்'' என்று இந்திய இராணுவத்தின் பாதுகாப்பிலிருந்து அறிக்கைவிட்ட பத்மநாபா, வரதராஜப்பெருமாள் மீதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை!

இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று எந்த அரசியல்வாதியோ கொழும்புப் பத்திரிகையோ குரல் கொடுக்கவுமில்லை.

ஆனால் விடுதலைப் புலிகள் ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து கொள்வதற்கு வசதியாக ஆறாவது திருத்தத்தை நீக்க வேண்டுமென்ற யோசனைக்கு அஷ்ரப் உட்பட அரசியல் கட்சிகள் பலவும் பத்திரிகைகள் சிலவும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

''இருபத்தைந்து வீதமான சிறுபான்மை இனத்தவரின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு எழுபத்தைந்து வீதமான பெரும்பான்மையினர் மறுத்தால் இருபத்தைந்து வீதத்தையும் இழக்க நேரிடும்'' என்று இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா எடுத்துக்கூறியதை இத்தருணத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்தம் என்று கருதுகிறோம்.

சோவியத் யூனியனில் லித்வேனியா மாநிலமே தனிநாடு பிரகடனம் செய்திருக்கிறது.

இங்கு ஆறாவது திருத்தம் நீக்கப்படாவிட்டால் தென்னிலங்கை அரசியல்வாதிகளும் பத்திரிகைகளும் பின்னர் வருந்தவேண்டிய நிலையும் ஏற்படலாம் என்று எச்சரிக்க விரும்புகிறோம்.

# இரண்டுஅமெரிக்க கப்பல்கள் கொழும்பிற்கு திடீர்விஜயம்

(கொழும்பு)

அமெரிக்காவிலிருந்து நேற்று திடீரென இரண்டு கப்பல்கள் வந்து சென்றுள்ளன.

நேற்று முன் தினம் இக்கப்பல்கள் காலை வந்து சில மணி நேரம் தரித்து நின்று விட்டு பின் திரும்பி விட்டன.

இக்கப்பல் வருகை பற்றிய மர்மம் மிக இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்,

## பிரதேச சபைத் தேர்தலில் சிறிலங்கா போட்டி

(கொழும்பு)

சிறிலங்கா சதந்திரக்கட்சி மாகாணசபையை அன்றும் எதிர்த்தது இன்றும் எதிர்க்கிறது. ஆயினும எதிர் வரும் பிரதேசசபைத் தேர்தலில் நாம் போட்டியிடும் திறமை மிக்கஇளைஞர்களைப் போட்டிக்கு அனுப்பி வெற்றி பெறுவோம்' என எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோபண்டாரநாயக்க சுதந்திரக்கட்சி பிரதிநிதிகளிடம் நிட்டம்புவவில் பேசும்போது குறிப்பிட்டார்.

இலோ மீற்றர் பரப்பையும் கொண்டுள்ளது. இத்தீவில் குறிப்பிடத்தக்க விவசாய நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன. இத்தீவின மத்தியில் காணப்படும் சேவை நிலையத்தைச் சார்ந்து ஆஸ்பத்திரி, உயர்தரப்பாடசாலை, உப தபாற்கந்தோர், கிராமசபைக் காரியாலயம், சங்கக்கடை மற்றும் சில வர்த்தக நிறுவனங்கள் காணப்படுகின்றன. இத்தீவு பரப்பில் சிறியதாக இருபபினும் மக்கள் அடர்த்தி உயர்வாக இருப்பதாலும் இக்கிராமத்தைச் சேர்ந்தவர்கள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் வாழ்வதால் ஓரளவு உயர்ந்த வாழ்க்கைத்தரத்தை அனுபவிக்கின்தினர். போதிய லயம், கிராமசேவகர் பிரிவுக் காரியாலயம், கூட்டுறவுச்சங்கக்கடைக்கிளைகள், தனியார் சிறு பலசரக்குக் கடைகள் காணப்படுகின்றன. இங்குள்ள அரச நிறுவனங்களால் வழங்கப்படும் சேவைகள் தரக் குறைவாக இருப்பது இத்தீவின் வளர்ச்சிக்குத் தடையாகவிருக்கின்றது. இதனால் இத்தீவின் சேவை நிறையத்தின் தரம் சேவைகளாலும், பௌதிக வசதிகளாலும் உயர்த்தப்பட வேண்டும்.

இவ் உபநகரின் வளர்ச்சிக்கு ஏற்ற வீடமைப்புத் திட்டத்துடன் இந்த நகரும் திறம்பட இயங்குவதற்குத் தேவையான பல நிறுவனங்கள் இடவமைவு பெறவேண்டும். 5000க்கு மேற்பட்ட மக்கள் வாழக் கூடிய பாக இடிவிழுந்த குண்டுக்கு தெற்காக அமைந்துள்ள மணியங்காட்டுப்பகுதி பெரிய குடியேற்றத் திட்டம் அமைக்கக் கூடிய நிலநீர் வளங்களைக் கொண்டுள்ளது. இப்பகுதி ஊர்காவற்றுறை யாழ்ப்பாண வீதிக்கு அணித்தாக இருப்பதுவும் குடியிருப்புகள் இல்லாத பெரியளவு காணிகள் காணப்படுவது வாழிடக் குடியேற்றத்துக்கு ஏதுவாக இருக்கிறது. இத்திட்டத்தில் வேலணையில் நிலமில்லாத குடும்பங்களுக்கு வீடமைப்புத் திட்டம் உருவாக்கப்பட வேண்டும். இத்திட்டமும் விவசாய சார்பற்ற கிராமியக் குடியிருப்பாகவே அமையும். இடிவிழுந்த குண்டு, வெட்டிச்குளம் வீதி அமைக்

சிறிய நகராக இருக்கிறது. 1960களுக்கு முன்னர் இந்நகர் பல துறைகளில் தீவுப்பகுதியின் முன்னணி நகராக இருந்தது. இதன் துறைமுகச் செயற்பாட்டு வீழ்ச்சியும், பண்ணைப்பாலம் அமைக்கப்பட்டதாலும் இதனது முக்கியத்துவம் குறைவடைந்ததும், யாழ்ப்பாணம் தீவுப்பகுதி மக்களின் பிரதான நகராக மாறியது.

இந்நகரின் எதிர்காலம் இந்நகரில் அமைந்துள்ளதுறைமுக விருத்தியிலேயே தங்கியுள்ளது இதனை வட இலங்கையின் முக்கிய மீன்பிடித் துறைமுகங்களுள் ஒன்றாக விருத்தி செய்ய லேண்டும். இங்கு மீன்பிடி தொடர்பான கைத்தொழில்கள் குறிப்பாக ஐஸ் தொழிற்சாலை கப்பல் கட்டல், கப்பல் திருத்தல்போன்ற நடவடிக்கைகள் விருத்தியாக்கப்படவேண்டும். மேலும் உல்லாசப் படகோட்டம் விளையாட்டுத்துறையை இங்கு விருத்தி செய்ய வேண்டும். மேலும் இந்நகர் கைத்தொழில் சுற்றுலாத்துறை நகரமாக விருத்தி செய்வதன் மூலமே இதற்கு புனர்வாழ்வு கொடுக்க முடியும்.

தீவுப்பகுதியில் உள்ளூர் போக்குவரத்துக்கு ஏற்ற போதிய தெருக்கள் இன்மை இப்பகுதியின் இடஞ்சார்பு விருத்தியைப்பெரிதும் பாதித்துள்ளது. ஒரு சில பிரதான தெருக்களைத் தவிர இரண்டாம தர பாதைகள் குறைவாகவுள்ளன, புதிய வீதிகள் அமைப்பதன் மூலம் பயன்படுத்தப்படாமலிருக்கும்நிலப் பகுதிகளைக் குறிப்பாக வாழிடத் தேவைக்குக் கீழ் கொண்டுவர முடியும். பின்வரும் பாதைகள் அமைப்பதற்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும்.

### புதிய வீதிகளும் அபிவிருத்தியும்

1. சுருவில் - சாட்டி வீதி சுருவிலிருந்து தீவின் தெற்குக்கரையோரமாகக் கெட்டில், திருக்சடலூர், கல்லாண்டமுனை, செட்டிபுலம் வழியாக சாட்டிவரை இப்பாதை அமைக்கப்படவேண்டும். இப்பாதை அமைப்பின் மூலம் தீவின் பகுதியில் காணப்படும் காட்டுப் பகுதிகளை விருத்தி செய்யக் கூடியதாக இருக்கும். இவ்வீதி பிரதானமாக பின் தங்கிய மீன்பிடிக் குடியிருப்புகளூடாக அமைக்கப்படவிருப்பதால் இக் குடியிருப்புகளின் அபிவிருத்திக்கு வழிவகுக்கும்.

2. செட்டிபுலம்-இடிவிழுந்த குண்டுவீதி. இப்பாதை செட்டிபுலம் வெட்டுக்குளம் சந்தியிலிருந்து சாட்டி, உப்புக்குளி, மணியங்காடு. சோனகன்காடு வழியாக யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை வீதியை இடிவிழுந்த குண்டடியில் சந்திக்கும். இப்பாதை செல்லும்

6ஆம் பக்கம் பார்க்க

களும் நின்றனர்.

அன்றிரவு டாக்டர் கப்ரால் என்ற வைத்திய நிபுணர் விசேஷ விமானத்தில் கொழும்பிலிருந்து வந்து தந்தை செல்வாவைப் பரிசோதித்து சத்திர சிகிச்சையும் செய்தார்.

நள்ளிரவாகி விட்டது. நாங்கள் எல்லோரும் மருத்துவ மனையில் தான்.

சத்திரசிகிச்சை வெற்றிகரமாக நடந்து விட்டது. (ஒப்பரேஷன் சக்ஸஸ்) காலையில் பெரியவர் கண் விழித்து விடுவார் என்று டாக்டர் எங்களிடம் கூறினார். நகரப் பதிப்பு இந்தச் செய்தியுடன் வெளிவந்தது.

ஆனால் பெரியவர் மறு நாள் என்ன அதன் பிறகு எப்போதுமே கண்ணைத் திறக்கவே இல்லை!

ஆனால் தினமும் பத்திரிகை நிருபர்கள மாலையிலிருந்து இரவு வரை மருத்துவ மனையிலேயே பொழுதைக் கழித்தனர்.

கொழும்புப் பத்திரிகைகள் சில தந்தை செல்வா காலை அசைத்தார், கையை அசைத்தார், கண்ணைத் திறந்தார் என்று செய்திகள் வெளியிட்டன.

ஆனால் பெரியவர் ஒரு மாதமாக அசையாது கண் மூடியபடியே படுத்துக் கிடந்தார்.

ஒரு மாதம் முடிந்ததும் அவர் கண்ணை இறுக மூடிக் கொண்டார். உலகம் கண்ணைத் திறந்தது.

★ ★ ★

யாழ்ப்பாண நகரில் இப்போது வீதிப்போக்குவரத்து ஒழுங்குகளைக் கட்டுப்படுத்தும் யாழ். மாநகரசபை ஊழியர்கள் இதில் அனுபவமுள்ளவர்களிடம் பயிற்சிபெறுவது நல்லது. வீதி ஒழுங்கு முறைக் கட்டுப்பாட்டு விதிகளையும் கொஞ்சம் படித்து அறிந்து கொள்வதும் விரும்பத்தக்கது.

இந்த ஊழியர்களில் சிலர் பழைய பொலிஸ்காரர் மாதிரி கொஞ்சம் கடுமையாக நடந்து கொள்ளவும்பார்க்கிறார்கள். இது தேவைஅற்றது!

# அனலைதீவு எழுவைதீவு படகுச்சேவை
# பிரயாணிகள் அவலநிலை

### மக்கள் மடல்

ஆசிரியர்,
ஈழநாதம்.

அனலைதீவு, எழுவைதீவு, ஊர்காவற்றுறை படகுசேவையில் அனலைதீவு தனியார் படகுகளே ஈடுபட்டுள்ளன இவை ஒன்றேனும் கடல் போக்குவரத்துக்கு தகுதியற்றவை. படகுகளில் தண்ணீர் வந்து கொண்டே இருக்கும் பாதுகாப்புச் சாதனங்கள் இல்லை. மரக்கோல் கூட ஒன்றும் இல்லை. எஞ்சினிலிருந்து மிதமிஞ்சிய புகை வந்து கொண்டேயிருக்கும். பிரயாணிகள் கண்களைக் கசக்கியபடியே பிரயாணம். சிலர் மயங்குவதுமுண்டு. சுழலும் எஞ்சின் பகுதிகள் மூடப்படுவதில்லை. இதனால் பல தடவைகள் பிரயாணிகள் காயமடைந்து தெய்வாதீனமாக உயிர்தபபியுள்ளனர். முதலுதவி வசதிகள் இல்லை. குடிநீர் வசதிகள் இல்லை. அடிக்கடி நடுக்கடலில பழுதடைவதுண்டு. தண்ணீர் என்று பணர் தவிப்பதுமுண்டு. படகின்மேல் தட்டில் சீமெந்து, கருவாடு உரம், மா மற்றும் உணவுப் பொருள்கள் அளவுக்கதிகமாக ஏற்றி பிரயாணிகளையும் அதிகமாக ஏற்றுகிறார்கள் படகுமேல் பகுதி ஓட்டை ஓடைசல் சீமெந்து போன்ற மா எல்லாம் பிரயாணிகள் தலையில் பிரயாணிகளின் உடுப்புக்களும் பாதிக்கப்படுகின்றன. நடுக்கடலில் பழுதாகி இரவு இருட்டில் பலமுறை பிரயாணிகள் அவஸ்த்தைப்படுவதுமுண்டு. பிரயாணிகள் படகுக்காரரை சாபமிட்டவாறு பயத்துடன் பிரயாணம் செய்கிறார்கள். இத்தனைக்கு ஒரு படகில் இரண்டு சிப்பந்திகள் தான் வேலை செய்கிறார்கள். படகு கட்டுவதற்கு பிரயாணிகளைப் பயன்படுத்துகிறார்கள்.

1983 ஆம் ஆண்டுக்குப்பின் படகைப் பரிசோதனை செய்யாது கொழும்பிலிருந்தே அதிகாரிகள் லைசன்ஸ் வழங்குகிறார்கள். அரச அதிகாரிகளோ எதுவித அக்கறையும் காட்டுவதில்லை. சுங்கத்திணைக்களமும் இயங்கவில்லை. வரவர இப்படகுச் சேவை பின்னோக்கிச் செல்கிறது

இத்தீவு மக்களின் சேவைக்காக அரசாங்கம் இரண்டு படகுகளை சேவையிலீடுபடுத்தவேண்டும். புனர்நிர்மாண வேலை மட்டத்தில் இப்படகுச் சேவை புனரமைக்கப் படவேண்டும். பொருட்களை ஏற்ற தனியொரு படகு சேவை செய்ய வேண்டும். ஊர்காவற்றுறை பிரதேச சபையின் பொறுப்பில் இச் சேவை நடத்தப்பட்டால் இதில்வரும் வருமானம் இத்தீவக அபிவிருத்தி வேலைகட்குப் பயன் படுத்தப்படலாம்

இப்படகு சேவையின் பயங்கர நிலையை ஊர்காவற்றுறைத் துறைமுகத்திலிருந்தே யாரும் அவதானிக்கலாம். அரச படகுச்சேவை கிடைக்கும் வரை பிரதேசசபை வேறு படகுகளை சேவையில் ஈடுபடுத்தலாம். தனியார் கையிலிருந்து பிரயாணிகளின் அவல நிலையைப் போக்க வேண்டும்.

இந்த அவஸ்தை பிரயாணத்தை உரியவர்களாவது தலையிட்டு ஆவன செய்ய வேண்டுமென்று தயவாசக் கேட்டுக் கொள்கிறேன்.

க. தர்மராசா
அனலைதீவு

# புத்தரில் ஏன் இந்த மோகம்?

ஆசிரியர்,
'ஈழநாதம்'

தமிழ் பாடநூல்களில் அரசாங்கம் தமது கலை கலாசாரத்தை திணிக்க முயல்கின்ற வேளையில் யாழ்ப்பாணத்தில் இருந்து அண்மையில் வெளிவந்த ஆண்டு 6 வரலாறு (ஆண்டு ஆறு) நூலின் அட்டைப்படத்தில் புத்தர் படம் அச்சிடப்பட்டிருந்தது. மேற்படி நூலில் உலகின் புராதன நதிக்கரை நாகரிகங்கள் பற்றி எழுதப்பட்டுள்ளது. இந்துநதிக்கரை நாகரிகம் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி இந்துநதிக்கரை நாகரிகத்தினை யாழ்ப்பாண மாணவர்கள் அறியும் வண்ணம் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் நூலில் அட்டைப்படம் போட்டிருக்கலாம். ஏன் மேற்படி அட்டைப்படம் புத்தர் போட்டது எனப் பலரும் கேள்வி எழுப்புகின்றனர். நூலாசிரியர் தன் பதவியுயர்வு பெறுவதற்காகவா? அல்லது மீள்பார்வை செய்தவர் தனது நலனைக் கருத்தில் கொண்டா? என எண்ண வேண்டியுள்ளது. யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் நூல்கள் யாழ்ப்பாணக் கலாசாரங்களை அட்டைப்படத்தில் விளக்கினால் என்ன? இனிமேல் செய்வார்களா? நூலாசிரியர் கமலாகுணராசா மேற்படி நூலின்மறுபதிப்பில் மேற்படி அட்டைப் படத்தினை இரத்துச் செய்ய வேண்டும் என்பது மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் நலன்விரும்பிகளினதும் கருத்தாகும்.

க. சந்திரன்
கொக்குவில்.

ஈழநாதம்

# மீளக் குடியேற்றம் உட்பட எவ்வித குடியேற்ற நடவடிக்கையும் கூடாது

(மட்டக்களப்பு)

தமிழீழ தாயகத்தில் மீளக் குடியேற்றம் உட்பட எந்த வொரு குடியேற்ற நடவடிக் கைகளும் மேற்கொள்ளப்ப டல் கூடாது. மீறினால் தமி ழீழ விடுதலைப் புலிகளினா லும் குடியேற்றங்கள் மேற் கொள்ளப்பட்டு பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் என் பதை ஸ்ரீலங்கா அரசுடனான பேச்சுவார்த்தைகளில் எடுத் துக் கூறியுள்ளோம்.

இவ்வாறு விடுதலைப் புலி கள் மக்கள் முன்னணி பிரதி தலைவர் எஸ். கரிகாலன் கெவிலியாமடு கிராமவாசிகள் மத்தியில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு – அம்பாறை மாவட்ட எல்லைக் கிராம வாசிகளான இக்கிராம வாசி கள் மீளக்குடியமர்வு, புனர் வாழ்வு, பாதுகாப்பு குறித்து ஆராய்வதற்காக சகல திணை க்கள உயரதிகாரிகள் சகிதம் விடுதலைப் புலிகள் அப்பகுதி க்கு சென்றனர்.

கிராமவாசிகளால் தெரிவிக் கப்பட்ட கருத்துக்களுக்கு அவர் மேலும் பதிலளித்துப் பேசுகையில், எமது எல்லை களை பாதுகாப்பதற்கு நாம் ஒற்றுமையுடனும் இறுதி மூச் சுடனும் செயல்படவேண்டும். உங்கள் பூரண ஒத்துழைப்புக் கள் மூலம்தான் எமது எல் லைகளை நாம் பாதுகாக்க முடியும் என்றார்.

அரச அதிபர் திரு. ஆர். யோகநாதன் பேசுகையில் கெ விலியாமடு மட்டக்களப்பு மாவட்டத்திற்குரியது. ஆனால் அம்பாறை அரச அதி பரின் நிர்வாகத்திற்குள் இல்லை. இது தொடர்பாக அம்பாறை அரச அதிபருடன் நிர்வாக ரீதியாக தொடர்பு கொள்ளப்படும் என்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பில் திரு. டேவிட், திரு. வே. தம்பிராசா, ஆகியோரும் கலந்துகொண்டனர். (37)

- கரிகாலன்

## கெவிலியாமடுகிராமவாசிகளுக்கு கொத்தணி வீட்டுத்திட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - அம்பாறை எல்லைக்கிராம வாசிகளான கெவிலியாமடு சிராமவாசிகள் மீளக்குடியமர்வதற்காக அப் பகுதியில் கொத்தணி வீட மைப்புத் திட்டம் உருவாக்கப் படும்.

இத்தகவலை அரச அதிபர் திரு. ஆர். யோகநாதன் அண் மையில் கெவிலியாமடு கிராம வாசிகள் மத்தியில் தெரிவித் தார்,

அவர் மேலும் தெரிவித்த தாவது;

கெவிலியாமடு கிராம வாசி களுக்கான சகல நிவாரண கொடுப்பனவுகளும் தாமத மின்றி வழங்கப்படும் என் றார். (37)

## நிவாரணத் திட்ட வீடமைப்பில் கிராமசேவகர் நிதி மோசடி

(மட்டக்களப்பு)

புனர்வாழ்வு புனரமைப்பு ஒன்றிணைந்த நிவாரணத்திட் டத்தின்கீழ் அமைக்கப்பட்டு வரும் வீடமைப்புத் திட்டம் ஒன்றில் மோசடி இடம்பெற் றுள்ளதாகத் தகவல்கள்மூலம் தெரிய வந்துள்ளது.

கிராம சேவை அலுவலகர் ஒருவர் 30 வீடுகளுக்குத் தலா 5000 ரூபா எனப் பணம்பெற் றுள்ளார்.

அதேநேரம் குடியிருப்பாளர் களிடம் தலா 2450ரூபா பணம் பெற்று அத்திவார வேலைகள் செய்துள்ளார்.

செயலகத்தில் பணம் தலா 5000 ரூபா எனப்பெற்றுக் குடி யிருப்பாளர்களுக்குத் தலா ரூபா 2100 என மீளக்கொடுத் துள்ளார். அதில்மிகுதி ரூ. 350 மேசன்கூலி என கழித்துள்ளா ராம்.

மேற்படி கிராமசேவை அலு வலகர் பிரிவில் சில வீடுகளுக்கு அத்திவாரமின்றி ரூபா 5000 வழங்கப்பட்டுள்ளது. வீடுகளு க்கு வழங்கப்பட்டுள்ள கட்ட டப் பொருட்கள் ரூபா 5000 பெறுமதியானதாக இல்லை.

இந்நிலையில் கிராம சேவை அலுவலகர்களுக்குச் செயல கத்தில் கடமையாற்றும் ஊழி யர்களும் உடந்தையா? என வினா எழுப்பப்படுகிறது. (37)

## மரண அறிவித்தல் சலுகைக்கட்டணம்

'ஈழநாதம்' பத்திரிகை வசதி குறைந்த மக்களுக் கும் மரணச் செய்தியை மற்றவர்களுக்கும் அதிக செலவில்லாமல் தெரி விப்பதற்கு சலுகை அளிக்க முன்வந்துள்ளது ஐம்பது சொற்களுக்கு மேற்படாத மரண அறி வித்தல் விளம்பரத்துக்கு நூறு ரூபாய் மட்டுமே அறவிடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

விளம்பர முகாமையாளர்
ஈழநாதம்

## இலங்கை வங்கி
## ஸ்ரான்லிவீதிக் கிளையில் நிவாரண கொடுப்பனவுகள்

(யாழ்ப்பாணம்)

மீளக்குடியமர்தல்நிவாரண இரண்டாம் கட்டம் (ஆயிரம் ரூபா) மீளக்குடியமர்தல் நிவா ரணம் (இரண்டாயிரம் ரூபா) உற்பத்தி முயற்சி நன்கொடை ஆகியன சனிக்கிழமை (28-04-1990) ஒன்பது மணி முதல் நண்பகல் ஒரு மணி வரை ஸ்ரான்லிவீதி இலங்கை வங்கிக் கிளையில் வழங்கப் பட உள்ளது.

இதில் மீளக்குடியமர்தல் இரண்டாம் கட்ட நிவாரணம் 1000 ரூபா 645 குடும்பங்களுக் கும், மீளக்குடியமர்தல் நிவா ரணம் 2000 ரூபா 239 குடும் பங்களுக்கும், உற்பத்தி முயற்சி நன்கொடை 4000 ரூபா 404 குடும்பங்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

இவ் நிவாரணங்களைப் பெறத்தகுதியுள்ளவர்கள் தங் கள் பகுதி கிராமசேவை யாளரிடம்தொடர்புகொண்டு வங்கிப் பதிவு இலக்கத்தி னைப் பெற்று கொடுப்பன வைப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரியவருகின்றது.

## பருத்தித்துறை, நெல்லியடி இலங்கை வங்கியில் நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

நாளையும்நாளை மறுதினம் 29 ஆம் திகதியிலும் இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளை யிலும் நெல்லியடிக் கிளையி லும் ஆயிரம் ரூபா நிவாரணம் வழங்கப்படும்.

27 ஆம் திகதியன்று வல் வெட்டித்துறை தெற்கு, வல் வெட்டித்துறை வடக்கு, தொண்டமானாறு, பொலி கண்டி கிழக்கு, பொலி கண்டி மேற்கு, கெருடாவில் தெற்கு, கெருடாவில்வடக்கு, அல்வாய் வடக்கு, அல்வாய் மேற்கு ஆகிய கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்த குடும்பங் களுக்கு நிவாரணம் இலங்கை வங்கியின் பருத்தித்துறை கிளையில் வழங்கப்படும்.

28 ஆம் திகதியன்று வியா பாரிமூலை, பருத்தித்துறை, பருத்தித்துறை கிழக்கு புலோலி கிழக்கு, புலோலி மேற்கு, தும்பளை ஆகிய கிராமசேவகர்பிரிவைச்சேர்ந்த குடும்பங்களுக்கு நிவாரணம் இலங்கை வங்கியின் பருத்தித் துறைக கிளையில் வழங்கப் படும்.

இதே தினத்தில் கரணவாய் வடக்கு, கரணவாய் தெற்கு, கரணவாய் மேற்கு, கர வெட்டி மத்தி ஆகிய கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த குடும்பங்களுக்கு நிவாரணம் இலங்கை வங்கியின் நெல்லி யடிக் கிளையில் பணம் வழங் கப்படும்.

29 ஆம் திகதியன்று மந் திகை, வல்லிபுரம், அம்பன், குடத்தனை, குடத்தனைகரை யூர், கற்கோவலம், சுண்டிக் குளம், நாகர்கோவில்தெற்கு, நாகர்கோவில் வடக்கு, துன் னாலை வடக்கு ஆகிய கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த குடும்பங்களுக்கு நிவாரணம் இலங்கைவங்கியின் பருத்தித் துறைக் கிளையில் வழங்கப் படும்.

இதே தினத்தில் வல்வெட்டி. கரவெட்டி மேற்கு, கரவெட்டி வடக்கு, கரவெட்டி கிழக்கு, கரவெட்டி மத்தி ஆகிய கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த குடும்பங்களுக்கு நிவா ரணம் இலங்கை வங்கியின் பருத்தித்துறைக் கிளையில் வழங்கப்படும்.

தவறாது மேற்குறிப்பிட்ட அட்டவணைகளைப் பயன் படுத்தி தங்கள் தங்களுக்குரிய நிவாரணப் பணத்தினைத்தவ றாது பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்.

## புதிய வீதிகளால்-..

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழி நன்னீர் பிரதேசத்தைச் சார்ந்திருப்பதால் வாழிட நில அபிவிருத்திக்குக் கூடிய வாய்ப்புண்டு.

3. அல்லைப்பிட்டி - நாரந் தனை வீதி, அல்லைப்பிட்டி மண்கும்பான் கிராமங்களு டாக கிழக்கு மேற்காக செல் லும் பாதை மண்கும்பான் சந்தியிலிருந்து மேற்கு நோக்கி அண்ணாமார் கோயில் நாவ லடிப்புலம், ஆரவியல்பிட்டி. பள்ளம்புலம், சரவணை வழி யாக நாரந்தனைசென்.மேரிஸ் தேவாலயம் வரை விஸ்தரிக் கப்பட்டு ஊர்காவற்றுறை பாதையுடன் இணைக்கப்பட வேண்டும். இப்பாதை செல் லவுள்ள வழி நன்னீர் பிரதே சமாக இருப்பது முக்கிய சிறப் புக் காரணியாகும்.

பரப்புகள் மாரியில் வெள்ளம் நின்று பங்குனி சித்திரை மாதங்களில் வெள்ளம் வற்றி மேச்சல் நிலங்களாக மாறு கின்றன. யூலை, ஒகஸ்ட் மாதங்களில் சோளகக் காற் றின் தாக்கத்தால் புழுதி எழுப் பப்படுகின்றது. இத்தரவை நிலங்களில் புல் செருக்கல் மண் அகழ்தல், சிப்பி எடுத் தல், ஆகியவற்றால் உயிர்ச் சூழல் பெரிதும் மாசுபடுகின் றது. இக்காரணிகள் அரச காரணிகளாக இருப்பதுவும் குறிப்பிடத்தக்கது. இந்நிலங் களின் சூழல் நல்ல முறையில் பேணப்படுவதுடன் மந்தை மேச்சலுக்குரிய நல்ல மேச்சல் தரவை நிலங்களாக மாற்றப் படவேண்டும்.

### சரணாலயம்

மண்டைதீவு- அல்லைப் பிட்டி பண்ணைக்கு இடைப்

## யாழ். மாநகரசபைக்கு பவுஸர் அன்பளிப்பு

(விசேட நிருபர்)

யாழ்.மாநகரசபைக்கு 'யுனி செப்' நிறுவனம் புதிய பவுஸர் ஒன்றை வழங்கியுள்ளது. பவு ஸரை யாழ்ப்பாணம்கொண்டு வருவதற்காகப் பிரதிநிதிகள் கொழும்பு சென்றுள்ளனர்.

யாழ்.மாநகர சபைக்கு இது வரை ஒரு பவுஸர் மட்டுமே சொந்தமாக இருந்து வந்தது. அந்த பவுஸர் மூலமாகத் தேவைகள் அனைத்தையும் நிறைவேற்ற முடியாமலிருந்த தென்று ஆணையாளர் திரு. வி.பி. பாலசிங்கம் விசேடநிரு பரிடம் தெரிவித்தார்.

புதிதாக வந்துசேரும் பவு ஸர் மூலமாக யாழ். மாநகர சபை புதிதாக நடைமுறைப் படுத்தும் சிரமதானதண்ணீர்த் தாங்கிகளுக்கு நீர் கொண்டு செல்லும் வேலைகள் இலகு வாக நிறைவேறுமென்றும்

## நிதி ஒதுக்கீடு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை என அறிய வந்துள் ளது.

இவ்வாறு நிதி ஒதுக்கப்பட் டிருக்கும் அதே வேளையில் உள்ளூர் உத்தியோகத்தர்க ளின் சேவைகள் மற்றும் கன ரக உபகரணங்கள் வாகனங் கள் ஆகியவையும் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டி ருக்கின்றன.

போக்கு வரத்து நெடுஞ் சாலைகள் அமைச்சர் விஜய பால மெண்டிஸ் தலைமையில் கொழும்பிலுள்ள அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்ற மகாநாட்டில் இவ் விபரங்கள் தெரிவிக்கப்பட்டன.

## யாழ். நகர

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

வதற்கு யாழ். மாநகர சபை டவடிக்கை மேற்கொண்டுள் ளதாக யாழ்-மாநகர சபை க்ஆணையாளர் திரு. வி. பி நபாலசிங்கம் நமது நிருபரு குத் தெரித்தார்.

அவ்வாறான-ஒரு நடவ டிக்கை நாவாந்துறை-வசந்த புரம் அண்ணா சனசமூக நிலையத்தினரின் அனுசர

## ஒன்றுபட்ட

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளாத கட்சிகள் தொழிற்சங் கங்கள் தங்களுடன் சேர்ந்து மேதினக் கொண்டாட்டங்க ளில் கலந்து கொள்ளுமாறும் டொமினிக் அழைப்பு விடுத் துள்ளார்.

இப்பத்திரிகையாளர் மகா நாட்டில் விடுதலைப்புலிகள் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் திருமதி அன்ரன் பாலசிங்கம் யாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு பொறுப்பாளர்

## ஆஸிப்பயணத்துக்கு இருதமிழ் மாணவர்கள் தெரிவு!

(கொழும்பு)

கொழும்புக்கும் ஆஸ்திரே லியாவுக்குமிடையில் அடுத்த மாதம் நான்காம் தேதி ஆரம்பமாகவிருக்கும் எயர் லங்கா கன்னிப் பயணத்தில் வடமராட்சி ஹாட்லிக் கல் திருக்கின்றனர்.

வழமையாகக் கன்னிப் பய ணத்தில் செல்லும் அமைச் சர்களின் பயணத்தை நிறுத்தி ஒன்பது மாகாணங்களிலிருந் தும் மாணவர்களைத் தெரிவு செய்யுமாறு ஜனாதிபதி

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழி நன்னீர் பிரதேசத்தைச் சார்ந்திருப்பதால் வாழிட நில அபிவிருத்திக்குக் கூடிய வாய்ப்புண்டு.

3. அல்லைப்பிட்டி - நாரந்தனை வீதி, அல்லைப்பிட்டி மண்கும்பான் கிராமங்களூடாக கிழக்கு மேற்காக செல்லும் பாதை மண்கும்பான் சந்தியிலிருந்து மேற்கு நோக்கி அண்ணமார் கோவில் நாவலடிப்புலம், ஆரவியல்பிட்டி, பள்ளம்புலம், சரவணை வழியாக நாரந்தனைசென்.மேரிஸ் தேவாலயம் வரை விஸ்தரிக்கப்பட்டு ஊர்காவற்றுறை பாதையுடன் இணைக்கப்பட வேண்டும். இப்பாதை செல்லவுள்ள வழி நன்னீர் பிரதேசமாக இருப்பது முக்கிய சிறப்புக் காரணியாகும்.

4. புங்குடுதீவு சுற்றுப் பாதை, புங்குடுதீவின் தற்போதைய பாதையமைப்பு மூலம் இதன் கரையோரப் பகுதிகளை நன்கு பயன்படுத்த முடியாதுள்ளது. இத் தீவைச் சுற்றிப்பாதை அமைப்பதால் இத்தீவின் குடியிருப்புகளான மடத்துவெளி வல்லன், மாவுதை, பெருங்காடு, குறிகாட்டுவான், கழுதைப்பட்டி, ஊரதீவு, பல்லதீவு ஆகியவற்றை இணைக்கக்கூடியதாக இருப்பதுடன் கரையோர நிலப்பரப்புகளையும் நன்கு பயன்படுத்த முடியும்.

5. ஊர்காவற்றுறை - சரவணை கரையோரப்பாதை, இப்பாதை வேலணைத்தீவின் வடகரையோரமாக ஊர்காவற்றுறையிலிருந்து பிராட்டி முனை, வடக்கு நாரந்தனை வழியாக சரவணை 8 ஆம் கட்டை வரை அமைக்கப்பட வேண்டும்.

6. சரவணைச்சந்தி அராலி இறங்குதுறை, இப்பாதை சரவணை சந்தியிலிருந்து ஏற்கனவேயுள்ள அணைக்கட்டு வழியாக அராலிபாலத்துறை வரை அமைக்கப்பட வேண்டும். அராலிப்பாதை அமைக்கப்படின் இப்பாதை அமைப்பு முக்கியமானதாகவரும்.

தீவுப்பகுதியில் 25% மேற்பட்ட நிலப்பரப்பு தரவை நிலங்களாகவும் சதுப்பு நீர்ப் பரப்புகளாகவும் இருக்கின்றன. வேலணைத்தீவு, புங்குடுதீவு, நெடுந்தீவு, மண்டைதீவு பகுதிகளில் இத்தகைய நிலப்பரப்புகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. வேலணைத்தீவில் யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை வீதியில் வீதிக்கு வடக்கேயுள்ள பகுதி தரவை நிலமாகவுள்ளது. புங்குடுதீவின் வடபகுதியும், மண்டைதீவின் மேற்குப் பகுதியும் தரவை நிலங்களாகவுள்ளன. இந்நிலப் ... நின்று பங்குனி சித்திரை மாதங்களில் வெள்ளம் வற்றி மேச்சல் நிலங்களாக மாறுகின்றன. யூலை, ஒகஸ்ட் மாதங்களில் சோளகக் காற்றின் தாக்கத்தால் புழுதி எழுப்பப்படுகின்றது. இத்தரவை நிலங்களில் புல் செருக்கல் மண் அகழ்தல், சிப்பி எடுத்தல், ஆகியவற்றால் உயிர்ச்சூழல் பெரிதும் மாசுபடுகின்றது. இக்காரணிகள் அரச காரணிகளாக இருப்பதுவும் குறிப்பிடத்தக்கது. இந்நிலங்களின் சூழல் நல்ல முறையில் பேணப்படுவதுடன் மந்தை மேச்சலுக்குரிய நல்ல மேச்சல் தரவை நிலங்களாக மாற்றப்படவேண்டும்.

### சரணாலயம்

மண்டைதீவு- அல்லைப்பிட்டி பண்ணைக்கு இடைப்பட்ட முக்கோண கடற் சதுப்புக் கண்ணாக்காட்டுப் பகுதியை இயற்கை ஒதுக்குப் பகுதியாக மாற்றவேண்டும். இது ஒரு இயற்கை அழகு கொண்ட பகுதியாக இருப்பதுடன் நகரத்துக்கு அண்மித்து இருப்பதால் சுற்றுலாத்துறையில் சிறந்த எதிர்காலம் உண்டு. இப்பகுதி நன்கு பாதுகாக்கப் பட்டால் பறவைச்சரணாலயமாக விருத்தியாக்குவதற்கு வாய்கபுண்டு.விறகுத் தேவைகளாக் இப் பகுதியிலுள்ள கண்ணாப் காடுகள் கட்டுப்பாடற்ற முறையில் வெட்டப்படுவது கவலைக்குரிய தொன்றாகும். இவ்வழியைக் கட்டுப் படுத்தா விட்டால் தீவுகளின் சூழலைப் பாதிக்கும். தீவுப் பகுதியின் கடற்கரைவிருத்தியினால் சுற்றுலாத்தொழில் வளர்ச்சிக்கு சிறந்த எதிர்காலம் உண்டு. சாட்டிலிருந்து அல்லைப்பிட்டி வரையிலான வெள்ளைக்கடற்கரை சுற்றுலாவிற்கு ஏற்றதாகவுள்ளது. இக் கடற்கரை வெண்ணிற மணலைக் கொண்டும், ஆழமற்ற மணல் கடற்பரப்பையும் கொண்டதாகவுள்ளது. ஏற்கனவே மண்கும்பான் பள்ளிவாசல் பகுதி முக்கிய சுற்றுலா மையமாக மாறி வருவதனைக் காணலாம். யாழ்ப்பாணநகருக்கு அண்மையிலிருப்பதால் நல்லமுறையில் விருத்தியாக்க வாய்ப்புண்டு. புங்குடுதீவு கண்ணகியம்மன் கடற்கரையும் சிறந்த மணற் கடற்கரையாக இருப்பதுடன் சுற்றிலா விருத்தி வாய்ப்பையும் பெற்றுள்ளது.

மேற்குறிப்பிட்ட சில திறமுறைகள்இடஞ்சார்அபிவிருத்தி திறமுறையில் சரியான முறையில்அமுல்செய்யப்படுமிடத்து தீவுப்பகுதிகளின் அபிவிருத்தியை நன்முறையில் முன்னெடுத்துச் செல்லலாம்.

(முற்றும்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26-ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## பவுஸர் அன்பளிப்பு

(விசேட நிருபர்)

யாழ்.மாநகரசபைக்கு 'யுனிசெப்' நிறுவனம் புதிய பவுஸர் ஒன்றை வழங்கியுள்ளது. பவுஸரை யாழ்ப்பாணம்கொண்டு வருவதற்காகப் பிரதிநிதிகள் கொழும்பு சென்றுள்ளனர்.

யாழ்.மாநகர சபைக்கு இது வரை ஒரு பவுஸர் மட்டுமே சொந்தமாக இருந்து வந்தது. அந்த பவுஸர் மூலமாகத் தேவைகள் அனைத்தையும் நிறைவேற்ற முடியாமலிருந்த தென்று ஆணையாளர் திரு. வி.பி. பாலசிங்கம் விசேடநிருபரிடம் தெரிவித்தார்.

புதிதாக வந்துசேரும் பவுஸர் மூலமாக யாழ். மாநகர சபை புதிதாக நடைமுறைப் படுத்தும் சிரமதானதண்ணீர்த் தாங்கிகளுக்கு நீர் கொண்டு செல்லும் வேலைகள் இலகுவாக நிறைவேறுமென்றும் அவர் திருப்தி தெரிவித்தார். (21)

## வீட்டுக்கடன்

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

வேறெந்த அரச கடனுதவிகளும் பெறாதவர்கள் இக்கடனுதவியைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம்,

யாழ்-மாநகர சபைப் பிரதேசத்திற்கு அப்பாற்பட்ட மாதகல் போன்ற பிரதேச தேச சபையைச் சேர்ந்தவர்களும் விளக்கம் இல்லாமல் படிவங்களைப் பெறவந்து கடந்த 23-ஆம் திகதி திங்கட்கிழமை மிண்டி அடித்தால் அன்றைய தினம் வழங்கப்படாமல் போனதாலேயே 25-ஆம் திகதியுடன் முடிவடைவதாக முன்னர் தெரிவித்த படிவ விநியோகம் இன்று வரை நீடிக்கப்பட்டதாகவும் மேலும் ஆணையாளர் நமது விசேட நிருபருக்குத் தெரிவித்தார். (21)

## கொழும்பு கோட்டை...

(1ஆம் பக்கத தொடர்ச்சி)

ஓடி விட்டார்களாம்.

காயங்களுக்குள்ளான பத்மநாதன் கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். அவரது நிலை கவலைக்கிடமானதல்ல என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்ப் போராளிக் குழுக்களுக்கிடையிலான பகைமை உணர்வுகளே இச்சூட்டுச் சம்பவத்துக்குக் காரணமாயிருக்கலாம் என்று பொலிஸார் கருதுகின்றனர். இதேவேளை, இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு வேறேதாவது காரணம் இருக்கலாமா என்பது குறித்தும் பொலிஸார் புலன் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

பத்மநாதன் சிறிது காலம் இந்தியாவில் வாழ்ந்து இலங்கை திரும்பியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கள் ஆகியவையும் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

போக்கு வரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் விஜயபால மெண்டிஸ் தலைமையில் கொழும்பிலுள்ள அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்ற மகாநாட்டில் இவ் விபரங்கள் தெரிவிக்கப்பட்டன.

## யாழ். நகர

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

வதற்கு யாழ். மாநகர சபை டவடிக்கை மேற்கொண்டுள்ளதாக யாழ்-மாநகர சபைக்ஆணையாளர் திரு. வி. பி நபாலசிங்கம் நமது நிருபருகுத் தெரித்தார்.

அவ்வாறான-ஒரு நடவடிக்கை நாவாந்துறை-வசந்தபுரம் அண்ணா சனசமூக நிலையத்தினரின் அனுசரணையுடன் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும், அடுத்து பாசையூர், மகேந்திரபுரம் பகுதியில் நடைமுறைப்படுத்த இருப்பதாகவும் அவர் மேலும் சொன்னார். (21)

## மே மாத

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

யோகத்தையும் ஆசிரியர்கள் கண்காணிப்பு செய்யவேண்டும் ஆனால் உணவு தயாரிப்பதில் ஆசிரியர்களோ மாணவர்களோ ஈடுபடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது.

மதியபோசன இடைவேளையின்போது மாணவர்கள் எக்காரணம் கொண்டும் பாடசாலையை விட்டுவெளியேற அதிபர்கள் அனுமதி வழங்கக் கூடாது.

அதிபர் சிரேஷ்ட ஆசிரியர்கள் பாடசாலை அபிவிருத்தி சங்க பிரதிநிதிகள் உட்பட்ட ஒரு குழு நாள்தோறும் மதிய போசனம் வழங்குவதை மேற்பார்வை செய்யவேண்டும்.

மாதத்தில் ஒருநாளை அல்லது இருநாளை பெற்றோர் தினமாக அமைத்து பிள்ளைகளின் செயற்பாடுகளை பெற்றோருக்கு உணர்த்தவேண்டும் பெற்றோர்கள் அழைக்கப்படும் தினத்தை கல்விப் பணிப்பாளருக்கும், கோட்ட உதவி கல்விப்பணிப்பாளருக்கும் முன்கூட்டியே அறிவித்தல் வேண்டும், அத்தினங்களில் கல்வித் திணைக்கள அதிகாரிகள் சமுகமளிப்பார்கள் மாணவர்களின் மாதாந்த பெறுபேறுகளை பெற்றோர் பார்வையிட்டு குறை நிறைகளை ஆராய்ந்து செயல்படமுடியும்

இவை போன்ற அறிவுறுத்தல்கள் உட்பட பல விடயங்கள் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (லோ)

## அளவைகள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருநெல்வேலி சந்தை வியாபாரிகள் சகலரும் தங்கள் நிறுவை அளவைகள்

கருவிகளுடன் அளவைகள் திணைக்களத்துக்கு வந்து அவற்றிக்கு சீல் வைக்கத் தவறும் பட்சத்தில் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமாம்.

தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

விளம்பர முகாமையாளர்
ஈழநாதம்

## ஒன்றுபட்ட

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளாத கட்சிகள் தொழிற்சங்கங்கள் தங்களுடன் சேர்ந்து மேதினக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளுமாறும் டொமினிக் அழைப்பு விடுத்துள்ளார்.

இப்பத்திரிகையாளர் மகாநாட்டில் விடுதலைப்புலிகள் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் திருமதி அன்ரன் பாலசிங்கம் யாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் பாரதி அவர்களும் கலந்து கொண்டார்கள்.

மேலும் மே தினக் கொண்டாட்டத்தில்நடைபெறவுள்ள ஊர்வலங்கள், ஓவியக்கண்காட்சி, பொதுக் கூட்டம் என்பன பற்றியும் ஸ்ரான்லி டொமினிக் குறிப்பிட்டார்.

**மட்டக்களப்பிலும்**
**மே தினம்**

அதேவேளை மட்டக்களப்பிலும் மாபெரும் மேதினக் கூட்டம் பிரமாண்டமாக நடைபெறவுள்ளது. இது தொடர்பாகநடைபெறவுள்ள மாபெரும் ஊர்வலம் மாமாங்கப்பிள்ளையார் கோவிலில் இருந்து ஆரம்பித்து காந்தி சிலையை வந்தடையும். அத்தோடு மட்டக்களப்பு வாவியில் படகுகளின் பவனியும் நடைபெறவுள்ளது. இவ் மேதினக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளுமாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிப் பிரதித்தலைவர் கரிகாலன் சகல தொழிலாளருக்கும் கோரிக்கை விடுத்துள்ளார்.

## வடக்கு-கிழக்கு

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

அகதிகளின் மீள் குடியேற்றத்திற்கான திட்டத்தைப் பாராட்டிய உயர் ஸ்தானிகர் இந்தத் திட்டத்திற்கு சகல உதவிகளும் வழங்கப்படுமென்று உறுதியளித்துள்ளார்.

அகதிகளின் புனர்வாழ்வுக்குப் பல நாடுகள் உதவி வருகின்றன எனக் குறிப்பிட்ட அமைச்சர் ஏ. எம். அதிகாரி அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் வழங்கிய ஒத்துழைப்புக்கும் நன்றி தெரிவித்தார்.

புலோலி கிழக்கு, புலோலி மேற்கு, தும்பளை ஆகிய கிராமசேவகர்பிரிவைச்சேர்ந்த குடும்பங்களுக்கு நிவாரணம் இலங்கை வங்கியின் பருத்தித் துறைக கிளையில் வழங்கப்படும்.

இதே தினத்தில் கரணவாய் வடக்கு, கரணவாய் தெற்கு, கரணவாய் மேற்கு, கர சேர்ந்த குடும்பங்களுக்கு நிவாரணம் இலங்கை வங்கியின் பருத்தித்துறைக் கிளையில் வழங்கப்படும்.

தவறாது மேற்குறிப்பிட்ட அட்டவணைகளைப் பயன்படுத்தி தங்கள் தங்களுக்குரிய நிவாரணப் பணத்தினைத்தவறாது பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்.

# ஆஸிப்பயணத்துக்கு இருதமிழ் மாணவர்கள் தெரிவு!

(கொழும்பு)

கொழும்புக்கும் ஆஸ்திரேலியாவுக்குமிடையில் அடுத்த மாதம் நான்காம் தேதி ஆரம்பமாகவிருக்கும் எயர் லங்கா கன்னிப் பயணத்தில் வடமராட்சி ஹாட்லிக் கல்லூரி மாணவன் ஆனந்தக் குமாரும், திருகோணமலை இந்துக்கல்லூரி மாணவன் ரவிச்சந்திரனும் பயணம் செய்யும் வாய்ப்பைப் பெற்றிருக்கின்றனர்.

வழமையாகக் கன்னிப் பயணத்தில் செல்லும் அமைச்சர்களின் பயணத்தை நிறுத்தி ஒன்பது மாகாணங்களிலிருந்தும் மாணவர்களைத் தெரிவு செய்யுமாறு ஜனாதிபதி பிரேமதாஸாவின் பணிப்பின் பேரில் பத்து மாணவர்கள் ஆஸ்திரேலியா செல்வதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# விசுவமடுவில் கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும்

(விசுவமடு)

மூன்று சிற்றூரவைகளின் பொதுக் கூட்டம் நேற்று மாலை விசுவமடு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது, இப்பொதுக்கூட்டத்தில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட பெபதுமக்களும் சிற்றூரவை உறுப்பினர்களும் கலந்து கொண்டார்கள்,

இப்பொதுக்கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் விசுவமடுப் பகுதிப் பொறுப்பாளர் றொனி, முல்லைத்தீவு மாவட்டப் பொறுப்பாளர் திவாகர், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கிளிநொச்சி பிரதேச அமைப்பாளர் மூர்த்தி தலைமைச் செயற்குழு நிர்வாகி நடேசன், மரிசான் ஆகியோருடன் விசுவமடு சிற்றூரவைத் தலைவர் உட்பட இன்னும் பல பிரமுகர்கள் பேசினர், இதன் பின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றது.

## 2100 புதிய

(1 ஆம் பக்கத் தொதிர்ச்சி)

வங்கிகள் கடனாக வழங்க முன்வந்துள்ளதாக தனியார் பஸ் போக்குவரத்துச் சபைப் பேச்சசளர் ஒருவர் தெரிவித்தார்,

ஜூலை மாதம் முதல் வாரத்திலிருந்து கிழமைக்கு 25 பஸ்கள் விகிதம் வீதிகளில் ஓட விடப்பட உள்ளன.

## மன். தேனிசைச்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தளபதி திரு. சுமன் ஆரம்பித்து வைப்பார்.

மன்னார் மாவட்டத்தில் இந் நிகழ்ச்சியினை பார்த்துக் கேட்டு இரசிப்பதற்காக பல லச்சக் கணக்கான மக்கள் கூடுவார்கள் என்பதால் இதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்விழாவிற் கலந்துகொள்கினற மக்களுக்கான விசேட போக்குவரத்து ஒழுங்குகளை பிரதேசப் பொறுப்பாளர் செய்துள்ளார்.

## இஸ்லாமிய---:

(முதலாம் பக்கந் தொடர்ச்சி)

பாஹி) விடுத்த றம்ழான் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

இறைவிசுவாசம் இருக்கிற அளவே ஒரு மனிதனின் லௌகீக ஆன்மீக வாழ்க்கையில் முன்னேற்றம் காணப்படும். புனித ரம்ழான் திருநாள் கொண்டாடும் முஸ்லிம் சகோதரர்கள் அனைவரும் பொறுமை என்ற சொல்லின் கீழ் கடந்த காலத் தாக்கங்களைப்பொறுமையுடன் ஏற்று நம்பிக்கை என்ற சொல்லின் கீழ் எதிர் காலத்தின் ஐக்கியமான சகோதரத்துவம் இணைந்த வாழ்க்கை பிறக்குமென்ற நம்பிக்கையில் இப்பெருநாளிலிருந்து வாழ்வைத் தொடங்க வேண்டும்.